Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 31 [15-08-1993] ஞாயிற்றுக்கிழமை ஓசை 178

## மதிய உணவு, இலவசச் சீருடை தேவையானோருக்கு மட்டுமே!

இலவசச் சீருடையும், மதியபோசனமும் உடனடியாக அவை தேவைப்படும் மாண வர்களுக்கு மாத்திரமே வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகக் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது. பிரேமதாஸா அரசினால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தினால் அதிக பணம் செலவாகுவதால் இதுபற்றி ஆராய்ந்து பரிந்துரைக் கும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உயர்மட்ட ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக் கிறார். இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் கல்வி, நிதி, கொள்கைதிட்டமிடல் அமைச்சு அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர். அரசு 1991இல் இலவச மதியஉணவிற்காக 1,500,000,000 ரூபா செலவுசெய்தது. இதே அளவு (6ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. மத்தியஸ்தம் நிராகரிப்பு; சிங்கள இராணுவம் வரவேற்பு

## தேவைஎனின் இந்திய உதவி கோரலாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினை விவகாரத்தில், மத்தியஸ்தம் வகிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப்படையை அழைக்க வேண்டுமென்ற நோபல்பரிசு பெற்ற நால்வர் சமர்ப்பித்த சமாதான யோசனையை அரசாங்கம் நிராகரித்ததையிட்டு இராணுவத்திலுள்ள உயர் அதிகாரிகள் பலர் வரவேற்றுள்ளதாக கொழும்புத்தினசரியொன்று தெரிவிக்கின்றது. அவ்வாறு உதவி தேவைப்படும் பட்சத்தில் இந்தியாவிடம் உதவியைக் கேட்பது சிறந்தது என இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

பெயர் குறிப்பிட விரும்பாத இவ் அதிகாரிகள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; ''விடுதலைப் புலிகள் தாமாகவே முன்வந்து ஆயுதங்களை கீழே வைத்தாலேயொழிய ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு ஐக்கியநாடுகள் சபையினால் புலிகளை நிர்ப்பந்திக்க முடியாது.'' என்றும்,

''ஐக்கிய நாடுகளின் சமாதானப் படைகள் உள்ள இடங்களில் கூட தீவிரவாதிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதன் விளைவாக ஐ நா. படையினர் கொல்லப்படும் நிலை தொடர்ந்து காணப்படுகிறது.'' எனவும் தெரிவித்தனர்.

''சமாதான வலயமொன்றை உருவாக்குவதன் மூலம் தகராறைத் தீர்த்துவைக்கமுடியாது. ஐக்கியநாடுகள் சமாதானப் படை வருவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலாகும். இந்திய அமைதி காக்கும் படை தோல்வி கண்டபோது ஐ. நா. சமாதானப்படை எப்படி வெற்றி காணமுடியும்?''என்பதோடு,

''புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு எங்களுக்கு உதவி எதுவும் தேவைப்படின் இந்தியாவிடம் அந்த உதவியைக் கேட்பது சிறந்ததாகும். ஆனால் இந்தியா மீண்டும் தலையிட்டு உதவி அளிக்குமா என்பது கேள்விக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று மணி நேரமாக மக்கள் வாழ்விடங்களை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இரவு 10. 00 மணிமுதல் அதிகாலை 1. 00 மணிவரை பலாலி இராணுவமுகாம் இராணுவத்தினர் பத்தமேனி, இடைக்காடு, கதிரிப்பாய், பகுதிகளை நோக்கியே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

## ஒருதொகுதி விடைத்தாள்கள் குமாரியில் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முதல் பத்து நாட்களிலும் நடைபெற்று முடிவடைந்த பாடங்களின் விடைத்தாள்கள் ''குமாரி'' கப்பல் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து இங்குவந்த பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவரே இவற்றை தம்முடன் எடுத்துச் செல்கின்றார்.

மேற்படி விடைத்தாள்கள் இன்று ''குமாரி'' கப்பலில் ஏற்றப்பட்டு இன்றே இக்கப்பல் திருக்கோணமலை வரை புறப்பட்டுச் செல்லுமென தெரிவிக்கப்பட்டது.

திருக்கோணமலையில் இருந்து வாகனம் மூலம் இவ் விடைத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்திற்கு எடுத்துச் செல்லப்படுமென தெரியவருகின்றது. (பா)

## இலங்கைத் தமிழ் அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பாது

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதில்லை என்று சுவிட்சர்லாந்து அரசின் அகதிகள் சமஷ்டி திணைக்களம் முடிவு செய்துள் ...ப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே.

எனினும், கொழும்பு எல்லாத் தமிழர்களுக்கும் பாதுகாப்பானதல்ல என்று அகதி... இருக்கும் சுவிஸின் பிரத்தியேக செய்தியாளர் ஒருவரும் கருத்து வெளியிட்டிருந்தார். அகதிகளுக்கு உதவும் அமைப்புக்களும், சபைகளும் சுவிஸிற்கு தொடர்ந்தும் நெருக்...

## திருமலை கிராமப் பகுதியில்

## மன்னார் பண்டிவிரிச்சானில் புக்காரா குண்டுத் தாக்குதல்

(மன்னார்)

மன்னாரில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலில் நேற்றுக் காலை ஈடுபட்டன.

நேற்றைய தினம் காலை 11-30 மணியளவில் மன்னார் மாவட்டத்திலுள்ள பண்டிவிரிச்சான் காட்டுப் பகுதிகளை வட்டமிட்ட இரண்டு புக்காரா குண்டுவீச்சு விமானங்களே இப் பகுதியில் குண்டுகளை வீசித் தாக்குதல்களை நடாத்தின.

## கொழும்பு நகரில் 'அறிமுகமாகாதவர் இரவு' 90 பேர் கைது

[கொழும்பு]

'அறிமுகமாகாதவர் இரவு' என்ற பெயரில் கொழும்பு நகரில் பொலிசார் மேற்கொண்ட தேடுதலின் போது 90பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பலர் தீவிரவாதிகள் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. இந்ததேடுதல் நடவடிக்கை கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

## புலிகள் தாக்கலாமாம் ராவுக்கு பலத்த பாதுகாப்பு

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் புதுடில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரசிம்மராவ் கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு பலத்தபாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர்களுள் ஒருவரான கிட்டுவின் மரணத்திற்கு இந்தியா காரணம் என்பதால் விடுதலைப்புலிகள் போராளிகளோ அல்லது சீக்கியப் போராளிகளோ மைக்கிறோ லைற் விமானம் மூலம் பிரதமர் நரசிம்மராவ் மீது திடீர்த்தாக்குதல் நடத்தக்கூடும் என அஞ்சப் படுவதால் பாதுகாப்பு நடவடிக்கை கடுமையாக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## திணைக்கள உத்தியோகத்தர்களை உள்வாரியாக சேர்ப்பதற்கு பல்கலை மாணவர் எதிர்ப்பு

(கிளிநொச்சி)

திணைக்கள உத்தியோகத்தர்களை உள்வாரி கற்கை நெறியில் இணைத்து விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டம் வழங்குவதை ஆட்சேபித்து கிளிநொச்சி விவசாய பீடமாணவர்கள் கடந்த 12 ஆம் திகதி முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரினால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரம் விவசாயபீட மாணவர்களின் மனதை ஆழமாகப்பாதித்துள்ளது எனவும்இதனை எதிர்த்து போராட்டத்தில் தாம் குதித் (6ஆம் பக்கம் பார்க்க)

## கிரிமினல்களிடம்

தப்பட்டது.

ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

## ஒருதொகுதி விடைத்தாள்கள் குமாரியில் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முதல் பத்து நாட்களிலும் நடைபெற்று முடிவடைந்த பாடங்களின் விடைத்தாள்கள் ''குமாரி'' கப்பல் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து இங்குவந்த பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவரே இவற்றை தம்முடன் எடுத்துச் செல்கின்றார்.

மேற்படி விடைத்தாள்கள் இன்று ''குமாரி'' கப்பலில் ஏற்றப்பட்டு இன்றே இக்கப்பல் திருக்கோணமலை வரை புறப்பட்டுச் செல்லுமென தெரிவிக்கப்பட்டது.

திருக்கோணமலையில் இருந்து வாகனம் மூலம் இவ் விடைத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்திற்கு எடுத்துச் செல்லப்படுமென தெரியவருகின்றது. (பா)

## திருமலை கிராமப் பகுதியில் படையினர் தீவிர வேட்டை

### பெண்கள் உட்பட பலர் கைது

(திருக்கோணமலை)

திருமலை நகரை அண்டிய கிராமப் பகுதிகளில் சிறிலங்கா பொலிசாரும் மற்றும் இராணுவத்தினரும், கடற்படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். நான்கு முகமூடிகளின் துணையுடன் அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் கிராமங்களில் இத்தகைய தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பகுதியிலுள்ள பொது மக்கள் வயது, பால் வேறுபாடின்றி அன்புவழிபுரம் அரசினர் பாடசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சோதனை இடப்பட்டனர்.

சந்தேகத்துக்குரியவர்கள் என்ற பெயரில் பெண்கள் உட்பட பலர் விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டனர்.

இதேவேளை நகரின் உட்பகுதிக்குள் பிரவேசிக்கும் சகல விதமான வாகனங்களும் பரிசோதிக்கப்படுவதுடன் பொதிகளும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிரடிப்படை முகாம்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் விலக்கப்பட்டு அப்பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் முகாமிட்டுள்ளதுடன் அங்கிருந்த ரெலோ தேசத்துரோகிகள் வேறு முகாம்களுக்குதுரத்திவிடப்பட்டனர்.

கடந்த 9ஆம் திகதி காலை 11 30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிப்பாளையம, புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி, மண்முனை ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம்களிலேயே சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினர் முகாமிட்டுள்ளனர்.

இம் முகாம்களிலிருந்த இராணுவத்தினர் மட்டக்களப்பு நகரப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேற்படிபகுதிகளில் இதுவரை தங்கியிருந்த ரெலோ தேசத்துரோக கும்பல்களை விசேட அதிரடிப்படையினர் வேறு முகாம்களுக்கு துரத்திவிட்டனர்.

மடுமாதா பெருநாள்:

## 150 பேருக்கு மட்டுமே இராணுவம் அனுமதி

(மன்னார்)

இன்று நடைபெறும் மடுமாதா திருவிழாவில் கலந்து கொள்வதற்கு மன்னாரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து செல்ல 150 பேருக்கு மட்டுமே இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொள்ள அனுமதி கோரியிருந்தபோதும் 150 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மறை மாவட்ட ரீதியில் ஒவ்வொரு பங்குப்பிரிவிலும் இருந்து 15பேரும், மன்னார் பே

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு ஐக்கியநாடுகள் சபையினால் புலிகளை நிர்ப்பந்திக்க முடியாது.'' என்றும்,

''ஐக்கிய நாடுகளின் சமாதானப் படைகள் உள்ள இடங்களில் கூட தீவிரவாதிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதன் விளைவாக

தெரிவித்தனர்.

''சமாதான வலயமொன்றை உருவாக்குவதன் மூலம் தகராறைத் தீர்த்துவைக்கமுடியாது. ஐக்கியநாடுகள் சமாதானப் படை வருவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலாகும். இந்திய அமைதி காக்கும் படை தோல்வி

''புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு எங்களுக்கு உதவி எதுவும் தேவைப்படின் இந்தியாவிடம் அந்த உதவியைக் கேட்பது சிறந்ததாகும். ஆனால் இந்தியா மீண்டும் தலையிட்டு உதவி அளிக்குமா என்பது கேள்விக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பாது

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதில்லை என்று சுவிட்சர்லாந்து அரசின் அகதிகள் சமஷ்டி திணைக்களம் முடிவு செய்துள்ளது. கடந்த ஜூலை 28 இல் இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

செப்டம்பர் 1992க்குப் பின்னர் சுவிட்சர்லாந்துக்கு சென்ற எண்ணூறு பேரை சுவிட்சர்லாந்து அரசு விரைவில் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே.

எனினும், கொழும்பு எல்லாத் தமிழர்களுக்கும் பாதுகாப்பானதல்ல என்று அகதிளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலய சுவிட்சர்லாந்து பொறுப்பதிகாரியும், சுவிஸ் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது என்பது முன்ளுக்கு மேலால் நடப்பதற்கு ஒப்பாகும் என இந்தியாவில் இருக்கும் சுவிஸின் பிரத்தியேக செய்தியாளர் ஒருவரும் கருத்து வெளியிட்டிருந்தார். அகதிகளுக்கு உதவும் அமைப்புக்களும், சபைகளும் சுவிஸிற்கு தொடர்ந்தும் நெருக்குதல் செய்ததால் சுவிட்சர்லாந்து அரசின் சமஷ்டி அகதிகள் திணைக்களம் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதில்லை என்று முடிவு செய்துள்ளது எனத் தெரியவருகிறது.

## பலவத்தை தடுப்பு முகாமில் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

பலவத்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தம்மை எதுவித நிபந்தனையுமின்றி விடுவிக்க வேண்டுமெனக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை முதல் இடம்பெற்று வரும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் 67 கைதிகள் ஈடுபட்டுள்ளனர் இவர்களில் ஐவர் 100 அடி உயரமான தண்ணீர்த் தாங்கியின் மேல்ஏறி அமர்ந்து கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனையோர் தடுப்பு கூடங்களிலும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

## மண்கிண்டிமலை தோல்வி ராணுவத்திற்கு பேரிழப்பு

### ஹமில்டன் தெரிவிப்பு

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதல் இராணுவத்திற்கு ஏற்பட்டது பாரிய இழப்பு என்று கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வன்சிங்க தெரிவித்தார்.

கடந்த 25ஆம் திகதி நடந்த இத் தாக்குதல் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு பாராளுமன்றக் கட்டடத்தில் வைத்து விளக்கமளித்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்க மேலும் கூறுகையில் அந்தமுகாமில் இரு கமாண்டோ பிரிவுகள் மற்றும் ஒரு கனரக ஆயுதப்பிரிவு இருந்தும் இழப்பை தடுக்க முடியாமல் போய்விட்டது. சண்டை நடைபெறாமலேயே முகாம் சூறையாடப்பட்டது. முகாமின் காப்பரண்களில் இருந்த இராணுவ வீரர்களை புலிகள் இயக்கத்தினர் சுட்டுக் கொல்லாமல் வெட்டியே கொலை செய்திருக்கிறார்கள். தாக்குதலின் போது முகாமில் இருந்தவர்கள் ஒன்றிணைந்து தாக்காமல் செயலிழந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் பிரதமர், கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஆகியோருடன் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரட்ண, விமானப்படை, கடற்படை தளபதிகளும் சமூகமளித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர்களுள் ஒருவரான கிட்டுவின் மரணத்திற்கு இந்தியா காரணம் என்பதால் விடுத

டிக்கை கடுமையாக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திணைக்கள உத்தியோகத்தர்களை

## உள்வாரியாக சேர்ப்பதற்கு பல்கலை மாணவர் எதிர்ப்பு

(கிளிநொச்சி)

திணைக்கள உத்தியோகத்தர்களை உள்வாரி கற்கை நெறியில் இணைத்து விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டம் வழங்குவதை ஆட்சேபித்து கிளிநொச்சி விவசாய பீடமாணவர்கள் கடந்த 12 ஆம் திகதி முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரினால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரம் விவசாயபீட மாணவர்களின் மனதை ஆழமாகப்பாதித்துள்ளது எனவும்இதனை எதிர்த்து போராட்டத்தில் தாம் குதித்

(6ஆம் பக்கம் பார்க்க)

கிரிமினல்களிடம்

## பாதுகாப்பு அதிகாரிகள் அடையாள அட்டை

(கொழும்பு)

அமைச்சர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசாருக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகளைக் கொழும்பில் பயங்கர குற்றவாளிகள் உபயோகிப்பதாகப் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியவந்துள்ளது. இந்த அடையாள அட்டைகளைக் காட்டிக் குற்றவாளிகள்பொலிசில் சிக்காமல் தப்பித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் செல்வாக்கைப் பாவித்து அடையாள அட்டைகளைப் பாவிப்பதற்கு அதிகாரமற்றவர்கள் சிலர், இந்த அடையாள அட்டைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முகாமில் கையொப்பமிட அகதிகளுக்கு உத்தரவு

மட்டக்களப்பு பாலமுனை அகதிமுகாமில் தங்கியுள்ள மக்கள் இராணுவமுகாமிற்கு வந்து வாரத்தில ஒரு தடவை கையொப்பமிடவேண்டும் என்று சிறிலங்கா இராணுவத்தினர் நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

பிரதி ஞாயிறுதோறும் இராணுவ முகாம் சென்று கையொப்பமிடவேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவத்தினர் இவ் இடம்பெயர்ந்தோர் முகாமை சுற்றி வளைத்து சோதனையிடுவதுடன் முகாமில் இருப்பவர்களை கைது செய்து இராணுவ முகாமுக்கு கொண்டு செல்கின்றனர். இராணுவ சோதனை நிலையங்களிலும் இவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். இதனால் இம் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகிறது.

## திருமலை நகரப்பகுதியில் புலிகள் நடமாட்டம்

(கொழும்பு)

திருக்கோணமலை புறநகர்ப் பகுதிகளில் அண்மைக் காலங்களில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் திருக்கோணமலைநகரத்தை அடுத்த பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதிக் கிராமவாசிகளை மேற்கோள் காட்டி ஐலண்ட்செய்தி வெளியிட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கியின் விருப்பப்படி சேமநலதிட்டங்கள் நிறுத்தம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களது நலன்களுக்கும், பொது மக்களின் சேம நலத்திட்டங்களுக்கும் வேட்டுவைப்பதன் மூலம் உலக வங்கியின் நிதி உதவியை அரசு பெற்றுவருகிறது என்றும் நிதி உதவியைப் பெறுவதற்காக உலக வங்கியின் நிபந்தனைகளுக்கேற்ப அரசாங்கம் தாளம்போட்டு வருகிறது. இவ்வாறு அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாடசாலை மாணவர்களது இலவச சீருடை, மதிய உணவு, உணவுமுத்திரை ஏனைய கல்வி

(6 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் பிரதேச ... மாதகல் ... யாழ் ...

## வரி விளம்பரம்

### வியாழ மாற்றம் பலன்கள்

ஜோஸ்யர் முத்திரை, சிறுவர்களுக்கு அறிவு நூல், கல்வியல் புலத்துக்கு ஆய்வு நூல், பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலன்கள், வியாபாரிகளுக்கு கழிவுண்டு. ஸ்ரீகாந்த்புத்தகசாலை நல்லூர் மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-7184)

### O L YR வகுப்புகள்

O/L, YR 10. விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, வர்த்தகம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் மிகவும் திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன. Shamrock யாழ். சுண்டுக்குளி

(5679)

### ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்சனெறிகள், இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனெறி) சீவப் இன்டஸ்றீஸ் வெளியீடுகளும் அருவி உரை ஆகியவை. நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை நல்லூர்

(சி-7134)

### தேவை

மணிக்கூடு திருத்தும் கடை ஒன்றிற்கு 18 வயதுக்கு மேற்பட்ட நன்கு எழுத வாசிக்கக்கூடிய பெண் உதவியாளர் தேவை. சகல விபரங்களுடன் கடிதம் மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும்: வனிதா வானொலி, மானிப்பாய் வீதி, கைதடி (5691)

### எம். ஜி. ஆர் திருமண சேவை

எல்லா இனத்தவர்களின் மணமகன் மணமகள் எம்மிடம் நிறைய உண்டு தொடர்பு. வே புண்ணியமூர்த் அனுமதி இலக்கம்: 251 8புத்தூர் சந்தி. மீசாலை. (5089)

## 20'1இல் சனத்தொகை 1கோடி 90 லட்சம்

(கொழும்பு)

இலங்கைத் தீவின் சனத்தொகை 2001ஆம் ஆண்டில்,

## 'வெளிச்சம்' சஞ்சிகை வெளிவந்தது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' (கலை, இலக்கிய சமூக இதழ்) ஆவணி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட ''எமது மண்ணில் எமது கால்களில் தங்கி நிற்போம்'' என்ற செய்தியுடன் கவிஞர் புதுவை இரத்தினதுரை, கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன், வவுனியா திலீபன், அழ பகீரதன், 'வோராளியின் பேனாவிலிருந்து' மகிந்தன் ஆகியோரின் கவிதைகளும், வை.சுந்தரேசன் மொழிபெயர்த்த கவிதையும் அடங்கியுள்ளன

மற்றும் சிறுகதைகளை குரும்பசிட்டியூரான் வல்வை. ந. அனந்தராஜ் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் எழுதியுள்ளனர். சாவித்திரி அத்துவிதானந்தனின் மொழிபெயர்ப்பில் றாசீ யூவானின் 'லில்லி மலர்கள்' என்ற சிறுகதையும் உண்டு.

செ. கிருஸ்ணராசா, கருணாகரன் ஆகியோரின் கட்டுரைகளும் இதழில் இடம்பெற்றுள்ளன.

இந்த இதழ் வெளிச்சத்தின் பதினேழாவது இதழாகும்.

## வடக்கு-கிழக்கு இணைப்பு வேப்பங்காய் போன்றது

-சிறிசேனகூரே

வடக்கு - கிழக்கு இணைப்போடு கூடிய சமஷ்டி ஆட்சிமுறை பெரும்பான்மை மக்களுக்கு வேப்பங்காயாகவே உள்ளது அதனை அவர்களுக்கு விற்பது கடினம்.

இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும் ஐ.தே.க.வின் பொதுச் செயலாளருமான சிறிசேனகூரே கூறினார்.

சமஷ்டி போன்ற குறிப்பிட்ட ஒரு அரசியல் ஏற்பாடு தான் தீர்வைத் தரும் என்பது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், வடக்கு-கிழக்கு இணைப்பு வற்புறுத்தப்படாமல் விடப்பட்டிருந்தால் சமஷ்டி யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பொன்னாலை நோக்கி எறிகணைத் தாக்கு

காரைநகர் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பொன்னாலை பகுதி மக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 10மணியளவில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக ஏவிய எறிகணைகள் பொன்னாலை, சவுக்கடி, சுழிபுரம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

## சுவர் இடிந்து வீழ்ந்து இளைஞர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் அருகில் நின்ற இளைஞர் ஒருவர் இடிபாடுகளுள் சிக்கி படுகாயமடைந்துள்ளார்.

சற்குணம் சிறிகரன் (15வயது) ஆலடி, உடுவில்) என்கின்ற இளைஞரே மேற்படி படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ். பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (யா)

## விண்ணப்பம் கோரல்

மாவட்ட மட்டத்திலான

### மகளிர் தொடர்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சமாசத்தால் மகளிர்களிடமிருந்து கோரப்படுகின்றன. அடிப்படைக் கல்வித் தகைமை: க. பொ. த. சாதாரணம் சித்தி.

மேலதிக தகைமைகள் :

(அ) பனைசார் தொழிலில் கூடிய தேர்ச்சி.

## அதிரடிப்படை பணிகள் மட்டக்களப்புக்கும் விரிவு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் மட்டுமே பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வந்த விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கைகள் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படுகிறது

அம்பாறை மாவட்ட எல்லையான பெரியநீலாவணையிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 மைல் தூரமுள்ள தாழங்குடா பிரதேசம் வரை விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

## விசேட பஸ்சேவை

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு தேர். தீர்த்தம் ஆகிய திங்கள், செவ்வாய் இரு நாட்களும பளை, கொடிகாமம், சாவகச்சேரியிலிருந்து சிற்றூர்தி சேவை நடைபெறும்.

பூங்காவன தினமான புதன்கிழமை மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து இலவச போக்குவரத்து சேவை நடைபெறுமெனவும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகிகள்,
சிற்றூர்திச் சேவை ஒன்றியம்
தென்மராட்சி.

(5693)

## நெஞ்சம் நெகிழும் 31-ம்நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



### கனகசபை சிவபாதசுந்தரம்

(B. Sc (Hons), Dip in Ed .S. L. E. A. S)

[கரவெட்டி]

மண்ணில்: விண்ணில்:

## அன்னதானம்

நல்லூர் கந்தசுவாமி கோயில் பூங்காவனத்தை முன்னிட்டு கல்வியங்காடு சந்தி வைரவர் அன்னதானம் வழங்கல் 18-08-93 புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(5690) -சந்தை வியாபாரிகள்

## தேவை

### வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

சுண்டிக்குளி

மேற்படி மருத்துவமனைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. டாக்டர்
   (அ) முழுநேர அளவிலான வேலை M.B B S தரம்
   (ஆ) பகுதிநேர அளவிலான வேலை M B. B. S. தரம்
2. தாதிமார்
   சத்திரசிகிச்சைக் கூடத்தில் அனுபவம் பெற்ற பெண் தாதி
   (மேற்படி பதவிகளுக்கு ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
நிர்வாகத்தினர்
வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம.

(5654) - நிர்வாகத்தினர்

## தேவை

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
மருந்து விற்பனையாளர் (பயிலுனர்)

தகுதி:- ஜீ.சீ.ஈ (சாதாரண) பரீட்சையில் ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஆங்கில பாடத்தில் சித்தி அவசியம்.

வயது:- 20 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

முடிவுத்திகதி:- விண்ணப்பங்களைஇம்மாதம்20-8 93க்கு முன்பாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கப்படவேண்டும்

★ வடமராட்சி தெற்கு, மேற்கு பகுதியிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

முகாமையாளர்,
மருந்து, பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
இல 484, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

(5655)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-15

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - சாம்பல்தீவுப் பகுதியில சிறிலங்கா இராணுவத்தினர் மேற்

ர்பு கொள்ளவும்: வனிதா வானொலி, மானிப்பாய் வீதி, கைதடி (5691)


## எம். ஜி. ஆர் திருமண சேவை

எல்லா இனத்தவர்களின் மணமகன் மணமகள் எம்மிடம் நிறைய உண்டு தொடர்பு. வே புண்ணியமூர்த் அனுமதி இலக்கம்: 251 8புத்தூர் சந்தி. மீசாலை. (5089)


## 20 1இல் சனத்தொகை 1கோடி 90 லட்சம்

(கொழும்பு)

இலங்கைத் தீவின் சனத்தொகை 2001ஆம் ஆண்டில், ஒரு கோடியே தொண்ணூற்றியாறு இலட்சமாக அதிகரிக்கும் எனவும், 2040ஆம் ஆண்டளவில் இரண்டு கோடியே எழுபது இலட்சம் வரை அதிகரிக்கலாம் எனவும் சிறிலங்கா அரசின் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

## இன்று திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

16ம் திகதி திங்கட்கிழமை நல்லூர் ஆலய தேர்த்திருவிழாவை யொட்டி அன்றைய தினம் கிளைகள் மூடப்பட்டிருக்கும் என்றும் பதிலாக ஞாயிற்றுக்கிழமை (இன்று) கிளைகள் திறந்து பாவனையாளர்களுக்கு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்றும் புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது (22)

## மெய்வல்லுநர் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேஜர்முரளி பாலர் பாடசாலையின் மெய்வல்லுநர் நிகழ்வு யா/கொக்குவில்நாமகள் வித்தியாசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக திரு. ஆ.மகாலிங்கம் (நல்லூர்உதவி அரசாங்க அதிபர்) அவர்கள் கலந்து கொள்கிறார்.

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலி இறங்குதுறைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஜெயந்தி பரமநாதன் (நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்) இராஜநாயகம் விஜேந்தினி (ஆசிர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அடையாள அட்டைகள் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் அருகில் நின்ற இளைஞர் ஒருவர் இடிபாடுகளுள் சிக்கி படுகாயமடைந்துள்ளார்.

சற்குணம் சிறிகரன் (15வயது) இளைஞரே மேற்படி படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ். பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (யா)


## விண்ணப்பம் கோரல்

மாவட்ட மட்டத்திலான

### மகளிர் தொடர்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சமாசத்தால் மகளிர்களிடமிருந்து கோரப்படுகின்றன. அடிப்படைக் கல்வித் தகைமை: க. பொ. த. சாதாரணம் சித்தி.

மேலதிக தகைமைகள்:

(அ) பனைசார் தொழிலில் கூடிய தேர்ச்சி.

(ஆ) உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் ஆற்றல்.

(இ) கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடாத்தும் ஆளுமை.

(ஈ) மாவட்ட ரீதியாக எமது பிரிவு மகளிர் குழுக்களை ஒருங்கமைத்து விரிவாக்கல் வேலைத் திட்டங்களை செயல்படுத்தும் ஆற்றலும், அனுபவமும்.

(உ) வேறு அரசு / அரசசார்பற்ற நிறுவனங்களில் பதவி வகிப்பவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் ஒப்பந்த அடிப்படையில், அல்லது நிரந்தரமாக இணைத்தல் அடிப்படையிலோ கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சம்பளம்:- தகைமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 25-08-93ம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், வடமாகாண தெ. ப. பொ கூ. சங்கங்களின் சமாசம் இல 499 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

—பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ ப. பொ. கூ. ச. சமாசம்.
499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7200)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### கனகசபை சிவபாதசுந்தரம்

14-07-93 அன்று அமரத்துவமடைந்த கனகசபை சிவபாதசுந்தரம் (முன்னாள் பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட சங்க செயலாளர்) அவர்களுக்கு எமது இதய அஞ்சலி. அவர்தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நன்றி.

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம்
பருத்தித்துறை மாவட்ட நடுவர் சங்கம்.

(3442)



## கனகசபை சிவபாதசுந்தரம்

(B. Sc (Hons), Dip in Ed .S. L. E. A. S)

[கரவெட்டி]

மண்ணில்: 26-12-1934 — விண்ணில்: 14-07-1993

நினைவலைகள் எம் நெஞ்சங்களில் மோதிக்கொள்ள
தூங்காத இரவுகள் துக்கத்தில் ஆழ
நீங்காத உறவை நீங்கள்
நீங்கி விட்டு ஒரு திங்கள் சென்றதுவோ
நீங்காது. நீங்காது உம் இனிய வதனம்
நிழலாக தொடர்ந்திடும் எம் உள்ளங்களில்.

எமது குடும்ப கலங்கரை விளக்கத்தின் இறுதி சடங்கிற்கு வருகைதந்து எமது துயரில் பங்கேற்றோருக்கும், கண்ணீர்ப்பூக்களை பிரசுரித்தோருக்கும் ஆறுதல் மொழி பலகூறி எம்மை தேற்றியோருக்கும் அனுதாப செய்திகள், இரங்கல் செய்திகள் அனுப்பிவைத்தோருக்கும் அன்னார் அமரத்துவம் எய்தியபின பலவகைகளிலும் உதவியோருக்கும், குறிப்பாக கல்வி உலகுக்கும் இன்று அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து சிறப்பித்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் பல

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்.

(5685)

## 31-ம் நாள் நினைவலைகள்

### அமரர் க. சிவபாதசுந்தரம்

[சிவத்தார்] BSc. Dip-in-Ed, S. L. E. A. S

(முன்னாள் அதிபர் யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

புகழ்க்கொடி நாட்டியது விக்னேஸ்வரா
தளர்வுற்று நின்ற காலகட்டத்தில்
அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டீர்கள்
விரிந்தது கல்லூரியின் நிலப்பரப்பு
விளையாட்டிடம் போதிய அளவானது
மாடிகள் நிமிர்ந்தன மின்னொளி கண்டோம்
குடிநீர்த் திட்டம் குறையது தீர்ந்தது
பாடநெறிகள் பலப்பல ஆயின
பல்கலைக் கழகம் பலபேர் கண்டோம்
நினைக்கின்றோம் இன்று நெஞ்சம் கசிகிறது
ஆத்ம சாந்திக்காக அவனடி போற்றுகிறோம்.

விக்னேஸ்வரா பழைய மாணவர்கள்.
திரு வீடியோ விஷன் அன்பர்கள்.

கரவெட்டி.

(5692)


வயது:- 20 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

முடிவுத்திகதி:- விண்ணப்பங்களைஇம்மாதம்20-8 93க்கு முன்பாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கப்படவேண்டும்

★ வடமராட்சி தெற்கு, மேற்கு பகுதியிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

முகாமையாளர்,
மருந்து, பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
இல 484, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

(5655)


## நினைவு கூருகின்றோம்... 1993-08-15

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - சாம்பல்தீவுப் பகுதியில சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் விழுப்புண் அடைந்த போராளியை வாகனத்தில் ஏற்றி வரும் போது நிலாவெளிப் பகுதியில் தவறி விழுந்ததில் எமைப்பிரிந்த-

**சீலன்** (இலட்சுமணப்பெருமாள் இலட்சுமணசீலன் - உவர்மலை - திருமலை)

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விவசாயப் போதனாசிரியர்.

1989ஆம் ஆண்டு மட்டு - பாவற்குடிச்சேனைப் பகுதியில் சமூகவிரோத சக்திகளின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மகாராஜன்** (வெ. தட்சணாமூர்த்தி - மட்டு)

திருமலை - பன்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பவான்** (நடராசா சரவணபவான் - சாம்பல்தீவு-திருமலை)

1990ஆம் ஆண்டு கடலில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**நீத்தி** (- - - மட்டுநகர்)

**குமணன்** (- - கற்கோவளம் - பருத்தித்துறை)

**இந்திரஜித்** (சரவணமுத்து நாகேஸ்வரராசா - வல்வெட்டித்துறை)

அம்பாறை - அக்கரைப்பற்று 5-ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**வாசு** (கந்தையாப்பிள்ளை உதயகுமார் - திருக்கோயில்-அம்பாறை)

**மேஜர் சிந்து** (சித்திரவேல் தேசிகன் - கிரான் - மட்டு)

திருமலை - தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அமலன்/கமலன்** (நடராசா கிருஷ்ணமூர்த்தி - வில்பற்றுக் குறோஸ் - திருமலை)

மட்டு - பெரியபுல்லுமலை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள். ஏறாவூர்ப் பகுதியில் முஸ்லிம் காடையர்களினால் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவனாகிய வாழைச்சேனை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழிளைஞன் இனம்தெரியாத குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்ட உறுகாமத்தைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13-ம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் விவசாயி

1992ஆம் ஆண்டு வவுனியா - கட்டையர்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**திருமாறன்/கங்கா** (வைத்திலிங்கம் விஜயகுமார் - பெரிய போரதீவு - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7193)

நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்

# Jaffna College Institute of Technology

## VADDUKODDAI.

யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும்
முழுநேரப் பயிற்சிநெறிகள் ஆரம்பமாக உள்ளன.

### வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

1) **Technician Diploma Courses**
(ஆங்கில மொழி மூலம்)
(i) Civil Engineering & Quantity Surveying- காலம் - 2 வருடங்கள்
(ii) Electronics & Telecommunication Engineering- காலம் - 3 வருடங்கள்
(iii) Mechanical Engineering - காலம் - 3 வருடங்கள்
(iv) Electrical Engineering - காலம் - 3 வருடங்கள்
கல்வித்தகைமை :— G. C. E. (O/L) - கணிதம் - C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி.

2) **Diploma Courses-**
காலம்- ஒரு வருடம்
(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & d - BASE III+) Practical on I B.M - PC AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை:— G. C. E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி - காலம்- ஒரு வருடம்
(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society) கல்வித்தகைமை:—G.C.E.(O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G C.E.(A/L)-ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி- காலம்- ஒருவருடம்

3) **Technician Certificate Course**
(i) Radio & T. V. Servicing- காலம்- ஒரு வருடம்
கல்வித்தகைமை:— G.C.E.(O/L)-ல் கணிதம் -S, விஞ்ஞானம் - S.

4) **Craft Certificate Course:-**
(தமிழ்மொழி மூலம்)

### யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

1) **Technician Diploma Courses**
(ஆங்கில மொழி மூலம்)
(i) Civil Engineering & Quantity Surveying - காலம்- இரண்டு வருடங்கள்
(ii) Electronics & Telecommunication Engineering காலம்- மூன்று வருடங்கள்
(iii) Mechanical Engineering- காலம்- மூன்று வருடங்கள்
(iv) Electrical Engineering - காலம் மூன்று வருடங்கள்
கல்வித்தகைமை:— G.C.E.(O/L) கணிதம் - C, விஞ்ஞானம்- C, ஆங்கிலம்- S உட்பட 6 பாடங்களில் சித்தி.

2) **Diploma Courses-**
காலம்- ஒரு வருடம்
(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data processing (BASIC, COBOL & d BASE III + ) Practical on IBM-PC, AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை:— G.C.E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி- காலம்- ஒரு வருடம்
(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society)

## மாநில காவல் துறையின் மீது முதல்வருக்கு நம்பிக்கையில்லை

எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

சென்னை குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருப்பது அவர் தமிழக மாநில காவல்துறை மீது நம்பிக்கை இழந்திருப்பதையே காட்டுகின்றது என தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் தமிழ்நாட்டிற்குள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கடத்திவரப்படுவதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாக மத்திய அரசு திரும்பத் திரும்ப எச்சரித்தும் தமிழக அரசு அதனைப் பொருட்படுத்தவில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் சென்னை ஆர். எஸ். எஸ். அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு தமிழக புலனாய்வுத் துறையின் கவனக் குறைவே காரணம் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

## மத்திய அரசு விசாரணையை ஜெயலலிதா கோரியது ஏன்?

அமைச்சர் முத்துசாமி விளக்கம்

(சென்னை)

சென்னை ஆர். எஸ். எஸ். தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்துடன் பல மாநிலங்களில் வெளிநாடுகளும் தொடர்புபட்டிருக்கலாம் என்று கருதப்படுவதனாலேயே மத்திய புலனாய்வு துறையின் விசாரணைக்கு முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருப்பதாக மாநில அமைச்சர் எம். முத்துசாமி கூறியுள்ளார்.

மக்கள் நல்வாழ்வு அமைச்சரும், அ. இ. அ தி மு க வின் துணைப் பொதுச்செயலாளருமான முத்துசாமி நேற்றுமுன்தினம் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் பாரதிய ஜனதா தலைவர் எல். கே. அத்வானியை சந்தித்தபின்னரே ஜெயலலிதா மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணைக்கு வற்புறுத்துவதாக கூறப்படுவதையும் முற்றாக மறுத்துள்ளார்.

### ஆளுநருடன் சந்திப்பு

(சென்னை)

இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் எல். ராம்தாஸ் நேற்று முன்தினம் சென்னையிலுள்ள ஆளுநர் மாளிகையில் ஆளுநர் எம். சென்னா ரெட்டியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் அதன்பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

## மாநில அரசியலில் ஆளுநர் தலையிடு செய்யக்கூடாது

(சென்னை)

மாநில ஆளுநர்கள் மாநிலத்தின் விவகாரங்களில் ஆர்வத்துடன் பங்கேற்கும் அதே சமயம் இந்த ஆர்வம் தலையீடாக மாறிவிடக் கூடாது என்று தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில் ஒரு மாநிலத்தில் ஆளுநர் இருக்கிறார் என்ற உணர்வு இருக்கவேண்டியது அவசியம் என்றும், ஆளுநர் பொறுப்பு வெறும் அரசியல் சாசன சட்டரீதியானது மட்டுமல்ல மிகவும் முக்கியமானதும், மதிப்பு மிக்கதும் ஆகும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஆளுநர் தனது அதிகார வரம்பிற்கு உட்பட்டு மக்களுடன் தொடர்பு கொள்வதும், அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அவசியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்

மேலும் மாநிலத்தின் எல்லா அரசியல்கட்சிகளிடம் இருந்தும் ஆளுநர் விலகிநிற்க வேண்டுமென்றும் - ஆளுங்கட்சியை பலவீனப்படுத்துபவராக ஆளுநர் இருக்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

## செயற்கைக்கோள் இன்சாட் இன்று முதல் செயற்படும்

- பிரதமர் அறிவிப்பு

இந்தியாவினால்ஏவப்பட்டிருக்கும்இன்சாட் 2பி செயற்கைக் [...] கருவிகள் எல்லாம் பலத்த சோதனைகளின் பின்னர் [...]

(BASIC, COBOL & d BASE III +) Practical on
I B.M - PC AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை:— G. C. E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி - காலம்- ஒரு வருடம்

(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society) கல்வித்தகைமை:—G.C.E.(O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G C.E.(A/L)-ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி- காலம்- ஒருவருடம்

## 3) Technician Certificate Course

(i) Radio & T. V. Servicing- காலம்- ஒரு வருடம் கல்வித்தகைமை:— G.C.E.(O/L)-ல் கணிதம் -S, விஞ்ஞானம் - S.

## 4) Craft Certificate Course:-

(தமிழ்மொழி மூலம்)

(i) மின்னிணைப்பு பயிற்சி - காலம் ஒரு வருடம் (Electrical wiring & Installation Practice) கல்வித்தகைமை: - G.C.E.(O/L)வரைபடித்திருத்தல் வேண்டும்.

## 2) Diploma Courses-

காலம்- ஒரு வருடம்

(i) Draughtsmanship (Civil)

(ii) Computer Programming & Data processing (BASIC, COBOL & d BASE III + ) Practical on IBM-PC, AT & MAT 386 Industrial Controller கல்வித்தகைமை:— G.C.E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி- காலம்- ஒரு வருடம்

(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society) கல்வித்தகைமை:— G.C.E (O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G.C.E.(A/L)-ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி- காலம்- ஒரு வருடம்.

## விசேட கவனத்திற்கு:—

- பிறநாட்டுப் பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (4) தவிர்ந்த எல்லாப் பாடநெறிகளும் ஆங்கிலமொழி மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். மேலும் இதற்குத் துணையாக பாடநெறிக்காலம் முழுவதும் ஆங்கில பாடம் கட்டாயமாக கற்பிக்கப்படும்.
- பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து உதவித்தொகை வழங்கப்படும்.
- நூலக வசதி உண்டு.
- விடுதி வசதி (ஆண்கள், பெண்கள்) உண்டு.
- விளையாட்டுத்துறை வசதிகள் உண்டு.

## முக்கிய குறிப்பு:-

- விண்ணப்பப்படிவம் விலை ரூபா 30-00 பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்:- (a) JCIT அலுவலகம் வட்டுக்கோட்டை. (b) JCIT, 182, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
- விண்ணப்பப்படிவங்களை 30-8-1993 காலை 10 மணிக்கு முன்னர் JCIT அலுவலகம் வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.
- போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும்.
- நேர்முகப்பரீட்சை 1-9 93, 2-9-93 ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் JCIT அலுவலகம், வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

**பணிப்பாளர்.**

(சி / 7152)

துடன் பங்கேற்கும் அதே சமயம் இந்த ஆர்வம் தலையீடாக மாறிவிடக் கூடாது என்று தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில் ஒரு மாநிலத்தில் ஆளுநர் இருக்கிறார் என்ற உணர்வு இருக்கவேண்டியது அவசியம் என்றும், ஆளுநர் பொறுப்பு வெறும் அரசியல் சாசன சட்ட வித்தார்.

அத்துடன் ஆளுநர் தனது அதிகார வரம்பிற்கு உட்பட்டு மக்களுடன் தொடர்பு கொள்வதும், அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அவசியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் மாநிலத்தின் எல்லா அரசியல்கட்சிகளிடம் இருந்தும் ஆளுநர் விலகிநிற்க வேண்டுமென்றும் - ஆளுங்கட்சியை பலவீனப்படுத்துபவராக ஆளுநர் இருக்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

## செயற்கைகோள் இன்சாட் இன்று முதல் செயற்படும்

**- பிரதமர் அறிவிப்பு**

இந்தியாவினால்ஏவப்பட்டிருக்கும்இன்சாட்2பி செயற்கைக்கோள் இன்று முதல் வழக்கமான பணிகளை மேற்கொள்ளும் என்று இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். உறுப்பினர்களின் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து பேசுகையில் முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட செயற்கைக் கோளான இன்சாட் 2பியில் இருக்கும் கருவிகள் எல்லாம் பலத்த சோதனைகளின் பின்னர் விரிவான முறையில் செயற்பட ஆரம்பித்துள்ளன என்றும், இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனம், மற்றும் விண்வெளி ஆய்வுத் துறையை சேர்ந்த விஞ்ஞானிகள், எஞ்சினியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் பலருக்கும் இந்த மாபெரும் சாதனைக்காக பாராட்டு தெரிவிக்கப்படுவதாகவும் பிரதமர் அறிவித்தார்.

## சட்டப்பேரவை கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை

**என்.டி. ராமராவ் தெரிவிப்பு**

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச சட்டப் பேரவையின் நடப்பு கூட்டத் தொடரில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்று தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும், ஆந்திர பிரதேச சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான என். டி. ராமராவ் கூறியுள்ளார்.

அண்மையில் ஆந்திராவில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்றில் தெலுங்கு தேசக்கட்சியின் உறுப்பினரான சிவாரெட்டி கொலையுண்டதையடுத்து ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும், தெலுங்கு தேசக் கட்சிக்குமிடையேயான மோதல்கள் தீவிரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலிய துருப்பினர் மீளப் பெறப்படுவர்

**பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு**

(றோம்)

சோமாலியாவில் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனது துருப்பினரை மீளப் பெற்றுக் கொள்வதென இத்தாலி முடிவு செய்துள்ளது.

இத்தாலியின் பாதுகாப்பு அமைச்சர் இது பற்றி தெரிவிக்கையில், சோமாலியாவில் கடந்த வியாழனன்று அமெரிக்கத் துருப்புக்கள் மற்றுமொரு பொதுமக்கள் படுகொலையை நடத்தியதைத் தொடர்ந்து தமது அரசாங்கம் இந்த முடிவை மேற்கொள்ள நேரிட்டதாகக் குறிப்பிட்டார்.

இப்போது சோமாலியத் தலைநகர் மொகாதிசுவில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான இத்தாலியத் துருப்பினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும், இவர்கள் கடந்த டிசம்பர் மாதம் முதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## எச்.என். காலமானார்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலரான எச். என். பெர்னாண்டோ அண்மையில் சென்னையில் காலமானார். அவரது பூதவுடல் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டு இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

பிரபல தொழிற்சங்கவாதியான இவர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக பலகாலமாக குரல் கொடுத்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கருணை மழைபொழியும் கதிரைத்தாயே!

கத்தோலிக்க திருச்சபை இன்று உலகடங்கிலும் பரிசுத்த தேவதாயின்விண்ணேற்பு விழாவை சிறப்புறகொண்டாடுகிறது. தேவதாயின் திருவிழாக்களிலே சிறப்பு வாய்ந்ததும் - அர்த்தம் பொதிந்ததும் அவளின் விண்ணேற்பு விழாவே! திருநூலின் தொடக்க நூலிலே (3:15) குறிப்பிட்டுள்ள பெண்ணை இறைவன் தனக்கு தாயாகவே முன்கூட்டியே தேர்வு செய்தார், இறைமகனை உலகிற்கீந்த தேவதாயை ''திருநூல்'' பல இடங்களிலே சுட்டிக்காட்டிஅவளின் தாழ்மையையும் - கீழ்ப்படிதலையும் பரிந்து பேசுதலையும் எடுத்துக் காட்டத் தவறவில்லை.

## திருநூல் தரும் சான்று


''இதோ கன்னிகருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவாள்'' (இசை7:14) என இறைவாக்கினர் இசையாஸ் கி.மு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இவளின் கன்னிமையையும் இறைவனால் அழைக்கப்பட்டவள் என்றும் எடுத்தோதினார். உலக மீட்பரை உலகிற்கு அளிக்க தாம் முன்பே ஏற்பாடு செய்திருந்த கன்னிமரியாளிடம் இறைவன் தனது தூதரை தூது சொல்லவைத்தபோது ''அருள் நிறைந்தவளே'' என்று விளிக்கப்படுகிறாள். அவளின் அச்சத்தைப் போக்க விரும்பிய தூதர் ''மரியே அஞ்சாதீர் கடவுளின் அருளை அடைந்துள்ளீர்'' (லூக்1:30) என்று ஆறுதலும் அதேவேளை அவளின் பேற்றையும் எடுத்துரைக்கின்றார். தொடர்ந்து உருவிலான்-உருவாக அவள் வழியாக தோன்ற இருப்பதை உரைத்தபோது, தனது நியாயமான சந்தேகத்தை எழுப்பி ''இது எப்படியாகும்''? 'நானோ கணவனை அறியேனே' என ''கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை.'' (லூக்1:37) என்று தெரியப்படுத்தப்பட்டபோது இறைச் சித்தத்தை பணிவுடன் ஏற்று 'நான் ஆண்டவரின் அடிமை' உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் (லூக்1:38) என்று தன்னைத் தாழ்த்திக் கொண்ட நிகழ்வை திருநூல் தெளிவாகத் தருகிறது.

''என் ஆண்டவரின் தாய்'' என்றும் விசுவாசித்தவள் பேறுபெற்றவள் என்றும் உரக்கக்கூவி (லூக் 1:48) எலிசபெத் அவளைப் பாராட்டிய போதும் அவள் தன்னைத்தாழ்த்தி ''தாழ்நிலை நின்ற இறைவனின் அடிமை நான்'' என்று (லூக் 1:48) கூறி நிற்கின்றாள். கடவுளின் தாயாகும் பேற்றை பெற்றுக் கொண்ட போதும் சாதாரண ஒரு பெண்ணாக

மூன்று மாதம் தங்கி அவளுக்கு பணிவிடை செய்யும் பெருந்தன்மையை அவளில் காண்கிறோம்.

''பெண்களுக்குள் பேறுபெற்றவளாக (லூக் 1:42) அவள் திகழ்ந்த போதும் எவ்விடத்திலும் தன்னை உயர்த்திப் பேசவோ - பெருமையடித்துக் கொள்ளவோ அவள் விரும்பவில்லை தான் பெற்றெடுத்த இறைக்குழந்தையைக் காப்பாற்றி - உலகிற்கு முழுமையாக தர விரும்பிய அவள் ஏரோதன் பிடிக்குள் அவரைத்தப்புவிக்க எகிப்துநாட்டிற்கு ஓடிப் போனதையும் (மத் 2:13) மன்னனின் இறப்புக்குப் பின் அவள் தன் மகனுடன் கலிலேயாவுக்கு திரும்பினதையும் (மத் 2:21) காண்கிறோம்.

இவ்வாறு தனது மகன் இயேசுவைப் பற்றி பலர் பல விதத்தில் புகழ்ந்து பேசி அவரைப் பாராட்டிய போதும், அதையிட்டு பெருமை கொள்ளாமல் ''தன் இதயத்தில் வைத்து- சிந்தித்து வந்த ஒரு அடக்கமுள்ள பெண்ணாக அவளைப்பார்க்கிறோம். (மத் 2:21,51) இறை மகன் இயேசுவுடன் அவளின் ஆத்மார்த்தமான பங்களிப்பும் பரிந்துபேசுதலும் தொடர்ந்து நிகழ்வதை ''கானா ஊர் திருமண வீட்டிலே'' நடைபெற்ற சம்பவத்தின் மூலம் அறியக்



பாட்டு முறைகளை இரகசிய இடங்களில் ஒன்றுகூடி நிறைவேற்றி வந்தனர். உறோமைய கலாபனையின்போது குகைகளிலும் மறைவிடங்களிலும் வாழந்து கிறித்தஸ்வர்கள் வழிபாட்டு முறைகளை கடைப்பிடித்ததுபோல யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையும் தமது விசுவாசத்தைக் காப்பாற்றமறைந்து வாழவேண்டி ஏற்பட்டது.

## யோசவ் வாஸ் முனிவரும்- சில்லாலையும்

ஆனால் சில்லாலையில் வேரூன்றிய திருச்சபையோ சுயாதீனமாக தங்கள் கத்தோலிக்க வழிபாட்டு முறைகளை குருக்களின்றி கடைப்பிடித்து ஒழுகினர். இவ்வேளை 1687 இல வணயோசவ்வாஸ் முனிவர் மாறுவேடத்தில் கத்தோலிக்க சேவைபுரிவதற்கு யாழ் நகர் வந்தார். வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டஇவர்பாதுகாப்பு இடமெனக் கருதப்பட்ட சில்லாலையில் ஒரு குடிசையில் தங்கி வாழ்ந்தார் இவரின் உண்மை உருவத்தை எப்படியோ தெரிந்துகொண்ட மூப்பரின் மனைவி அவரை நன்கு பராமரித்தார். தான் நோயினின்று விடுபட்டது தேவதாயின் அருளினாலதான் என்று கண்டு ''ஆரோக்கியமதா'' என்றும் 'மருந்து

கும் இடத்தில் அத்திவாரக்கல் நாட்டினார். 1843இல் சுண்ணக்கற்களால் சுவரெழுப்பி ஓலைக்கீற்றுக்களால் வேயப்பட்ட ஆலயம் 1874இல் திருவிழாக் காலங்களில் வாணவேடிக்கையினால்2ஆவது தடவை தீக்கிரையானது. இவ்வேளையிலும் அன்னையின் திருச்சொரூபம் எந்த வித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை பின் 1896 இலும் 1916இலும் ஆலயம் இருகட்டங்களாக திருத்தப்பட்டு சுண்ணக்கற்களினால் சுவரெழுப்பி-ஓடுகளால் வேயப்பட்டு ஆலயத்தின் உள்ளே சிம்மாசனம் எழுப்பி அன்னையின் திருச்சொரூபம் கொலுவீற்றிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. 1958இல் நவீன வேலைப்பாட்டுடன் அன்னைக்கு ஒரு பேராயம் அமைக்கவென பெல்கியக் குரவர் வண.லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளார் கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் ஒரு பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டியெழுப்பி இலங்கையிலேயே ஒரு தலைசிறந்த ஆலயமாக தூண்களின் துணையின்றி வானவில்லின் வடிவில் தங்கி நிற்கும் இன்றைய ஆலயத்தை 1961இல் கட்டி முடித்தார். எமது மக்கள் உள்ளளவும் எமது ஆலயத்தையும் அதைக்கட்டி முடித்த தந்தை லூயிஸ் டெய்சி அ.ம.தி. அவர்களையும் மறவார்கள்.

## இன்று எமது கிராமம்?

இன்று :-

கடந்த ஆண்டு ஆகஸ்ட் திங்கள் அன்னையின் பெருவிழாவை கொண்டாடி முடித்த கையோடு நாட்டில் ஏற்பட்ட அரசியல் வன்செயல்களினால் எமது மக்கள் இடப்பெயர்ந்து பல இடங்களிலும்பரந்து வாழ்ந்தபோதிலும் அன்னை அவளை நம்பிய பிள்ளைகளை கைவிடாது அபயக்கரம் தந்து கொண்டே இருக்கிறாள். சில்லாலையில் அவள் பாதுகாப்பின் கீழ் வாழ்ந்த மக்களும் வாரத்தில் ஓரிரு தடவையாவது அவளது திருமுக தரிசனம் பெற்று தங்கள் முறையீடுகளை அவளிடம் சொல்லி அழுது தனியாக அல்ல சமூகமாக அவளை வந்து தரிசிக்க விண்ணப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள்.எத்தனை பயங்கரவாதம் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்த போதிலும் இம்முறையும் அவளின் பக்தர்கள் முழுமையாகச் சென்று ஒன்பது நாட்களும் அவளின் பாதத்தில் தங்கியிருந்து நிரந்தர சமாதானத்துக்காகவும் நிம்மதிவாழ்விற்காகவும் அவளது திருமகனிடம் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று விண்ணப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள்,

# சில்லாலை கதிரைமாதா ஆலய உற்சவ சிறப்பிதழ்

கூடியதாக இருக்கின்றது. குறைபாடுகள் களையப்பட வேண்டும் அனைத்தும் நிறைவாக அமைதல் வேண்டும் என்ற அக்கறையுடன் செயற்பட்டு, மகனிடம் முறையிட்ட தாயை அங்கே காண்கின்றோம். அவரிடம் உள்ள தெய்வீக சக்தியை பிறப்புத்தொட்டே கண்டுணர்ந்து- இதயத்தில் சிந்தித்து வந்த தாய், தன்மகனால் ''இலட்சியம் முடியும்'' என்ற நம்பிக்கையால் அவர் சொல்லுறபடி செய்யுங்கள்'' என்று ஊழி

டிக் காட்டுகிறது.

இயேசுவின் வாழ்வில்-பணியில் தனது நிறைவான பங்களிப்பை செய்து கொண்டே வந்த அவளை தனியாக-ஆதரவற்றவளாக விட்டுச்செல்ல விரும்பாத இயேசு ''இதோ உன்தாய்'' என்று தான்அன்பு செய்த சீடன் அருளப்பரின் பாதுகாப்பில் ஒப்படைத்ததை (அரு19:27)இல்காண்கிறோம்.

திருச்சபையின் தொடக்க வரலாற்றில் இயேசுவால் நற்செய்திப் பணிக்கென தேர்ந்து கொள்ளப்பட்டவர்களோடு

தட்ட 400 ஆண்டுகாலம் கத்தோலிக்க பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்ட சில்லாலை திருச்சபையின் வரலாற்றில் ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

16-ம் நுற்றாண்டு ஆரம்ப காலத்தில் இலங்கை வந்த கத்தோலிக்க குருமார் 1623ல் யாழ்ப்பாணத்தில் தமதுமறை பரப்புப்பணியைத் தொடக்கி வைத்தனர். பண்டத்தரிப்பு நிர்வாகத்தின் கீழ் இருந்த சில்லாலை வளமானதும் அமைதியான சூழநிலையும்

வசித்தோர் இரகசியமாக கூடி வந்து அன்னையை தரிசிப்பதும் அவளிடம் தங்கள் தேவைகளை எடுத்துக் கூறி வேண்டுவதும் நாளாந்த நிகழ்ச்சியாகத் தொடங்கியது

ஒரு தடவை அன்னையின் பாதத்தண்டையில் அமர்ந்து அழுதுபுலம்பி தமது விண்ணப்பங்களை முறையிட்ட மக்கள் குடிசை ஆலயத்தில் தங்கள் தீபங்களை அணையாது விட்டுச்சென்ற சமயத்தில் தீபத்தின் சுடர் காற்றில் படர்ந்து

மாதா என்றும் அவளை அழைத்தார். குடிசைக்கோயிலாக இருந்த அன்றைய ஆலயத்தில் தான் அவர் கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் தங்கியிருந்துதிருப்பலிநிறைவேற்றி தனதுஞானக் கடைமைகளை கடைப்பிடித்து வந்தார் என்பது வரலாறு கூறும் உண்மை. இவ்வாறு கதிரைச் செல்வியின் திருச்சொரூபத்தையும் யோசவ் வாஸ் முனிவரையும் காப்பாற்றிய பெருமை சில்லாலை மக்களையேசாரும்.

# சில்லாலை கதிரைமாதா ஆலய உற்சவ சிறப்பிதழ்

ஆகாதது ஒன்றுமில்லை. (லூக்1:37) என்று தெரியப்படுத்தப்பட்டபோது இறைச் சித்தத்தை பணிவுடன் ஏற்று 'நான் ஆண்டவரின் அடிமை' உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் (லூக்1:38) என்று தன்னைத் தாழ்த்திக் கொண்ட நிகழ்வை திருநூல் தெளிவாகத் தருகிறது.

''என் ஆண்டவரின் தாய்'' என்றும் விசுவாசித்தவள் பேறுபெற்றவள் என்றும் உரக்கக்கூவி (லூக் 1:48) எலிசபெத் அவளைப் பாராட்டிய போதும் அவள் தன்னைத்தாழ்த்தி ''தாழ் நிலை நின்ற இறைவனின் அடிமை நான்'' என்று (லூக் 1:48) கூறி நிற்கின்றாள். கடவுளின் தாயாகும் பேற்றைப் பெற்றுக் கொண்ட போதும் சாதாரண ஒரு பெண்ணாக தன்னை உட்படுத்தி தன் உறவினரான எலிசபெத்திடம் கூடியதாக இருக்கின்றது. குறைபாடுகள் களையப்பட வேண்டும் அனைத்தும் நிறைவாக அமைதல் வேண்டும் என்ற அக்கறையுடன் செயற்பட்டு, மகனிடம் முறையிட்ட தாயை அங்கே காண்கின்றோம். அவரிடம் உள்ள தெய்வீக சக்தியை பிறப்புத்தொட்டே கண்டுணர்ந்து- இதயத்தில் சிந்தித்து வந்த தாய், தன்மகனால் ''இலட்சியம் முடியும்'' என்ற நம்பிக்கையால் அவர் சொல்லுறபடி செய்யுங்கள்'' என்று ஊழியரை உரிமையோடு பணித்த தாயை நற்செய்தி எமக்கு சுட்டிக் காட்டுகிறது.

இயேசுவின் வாழ்வில்-பணியில் தனது நிறைவான பங்களிப்பை செய்து கொண்டே வந்த அவளை தனியாக-ஆதரவற்றவளாக விட்டுச்செல்ல விரும்பாத இயேசு ''இதோ உன்தாய்'' என்று தான்அன்பு செய்த சீடன் அருளப்பரின் பாதுகாப்பில் ஒப்படைத்ததை (அரு19:27)இல்காண்கிறோம்.

திருச்சபையின் தொடக்க வரலாற்றில் இயேசுவால் நற்செய்திப் பணிக்கென தேர்ந்து கொள்ளப்பட்டவர்களோடு இவளும் ஒருத்தியாக பங்கேற்று அப்போஸ்தல குடும்பத்துக்கு தயாக இருந்துதன்மகன் விட்டுச்சென்ற பணிக்கு ஊக்கம் ஊட்டுபவளாக இருந்து செயலாற்றியதை அப்போஸ்தலர் பணிநூல் தருகிறது. (அப்பணி 1:14)

இவ்வாறு திருநூலின் பல இடங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மரியாளின் தாழ்ச்சியும்- கீழ்ப்படிதலும் உலகில் உள்ள அனைவருக்கும் சிறந்த மூன்மாதிரியாக திகழ்கிறது. ''எல்லாத் தலைமுறைகளும் அவளைப் பேறுடையாள்'' எனப் போற்றப்படுவதற்கு (லூக் 1:48) உரித்துடையவளான அவளை இறைவன் ஆத்ம- சரீரத்தோடு விண்ணகத்துக்கு எடுத்துக் கொண்டதில் வியப்பேதுமில்லை.

### சில்லை மண்ணில் வல்லோன் தாய்

அவளின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்ட சில்லாலையூர் மக்கள் தங்கள் தாயை உள்ளன்புடன் ''கதிரைச்செல்வி'' ''ஆரோக்கியமாதா'' ''மருந்துமாதா'' ''தஸ்றேவிஸ்'' எனப்பலபெயர்களால் அழைத்து மகிழ்கின்றனர் சில்லாலையின்காவல் தெய்வமாக ஏற்றிப் போற்றப்படும் அன்னை மரியாளுக்கு அவர்கள் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15ல்விழா எடுத்து வெகுவிமரிசையாக கொண்டாடிமகிழ்தல்வழக்கம்கிட்டத்தட்ட 400 ஆண்டுகாலம் கத்தோலிக்க பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்ட சில்லாலை திருச்சபையின் வரலாற்றில் ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

16-ம் நூற்றாண்டு ஆரம்ப காலத்தில் இலங்கை வந்த கத்தோலிக்க குருமார் 1623ல் யாழ்ப்பாணத்தில் தயதுமறை பரப்புப்பணியைத் தொடக்கி வைத்தனர். பண்டத்தரிப்பு நிர்வாகத்தின் கீழ் இருந்த சில்லாலை வளமானதும் அமைதியான சூழநிலையும் கொண்டிருந்தமையினால் மனம் திரும்பிய மக்கள் தமது பாதுகாப்பு இடமாகவும் தமது வழிபாட்டு முறைக்கு ஏற்ற இடமாகவும் சில்லாலையைத் தெரிந்து கொண்டனர்.

இவர்களின் இறைநம்பிக்கை அதிகரித்துக் காணப்பட்டமையால் மரியன்னையின் பாதுகாப்பில் அவர்களை ஒப்படைக்க எண்ணி போர்த்துக்கல் நாட்டில் இருந்து எமது பாதுகாவலியின் திருச்சொரூபத்தை அதிவணக்கத்துடன் கொண்டு வந்து பண்டத்தரிப்பில் வைத்து வணங்கத்தொடங்கினர். ஒல்லாந்தரின் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்பட்டமையினால் சில்லாலை மக்கள் இரவோடு இரவாக அன்னையின் திருச்சொரூபத்தை எடுத்து வந்து கிணறுகளிலும், ஓலைக்குடிசைகளிலும் வைத்துப் பாதுகாத்து இரவு வேளைகளில் ஒன்று கூடி செபமாலை ஜெபித்தும் தங்கள் வணக்கத்தை செலுத்தியும் வந்தனர்.

கதிரைச்செல்வியின் மகிமையும் அற்புதங்களும் அதிகரித்துக் காணப்பட்டதைக் கேள்வியுற்ற அயல் கிராமங்களில் வசித்தோர் இரகசியமாக கூடி வந்து அன்னையை தரிசிப்பதும் அவளிடம் தங்கள் தேவைகளை எடுத்துக் கூறி வேண்டுவதும் நாளாந்த நிகழ்ச்சியாகத் தொடங்கியது

ஒரு தடவை அன்னையின் பாதத்தண்டையில் அமர்ந்து அழுதுபுலம்பி தமது விண்ணப்பங்களை முறையிட்ட மக்கள் குடிசை ஆலயத்தில் தங்கள் தீபங்களை அணையாது விட்டுச்சென்ற சமயத்தில் தீபத்தின் சுடர் காற்றில் படர்ந்து தாவி ஆலயத்தின்கூரையில். பிடித்துக் கொண்டு ஆலயம் (குடிசை) முழுவதும் தீக்கங்கைகளுக்கு இரையாகிவிட்டது. காலையில் ஆலயத்துக்கு வந்த மூப்பர் ஆலயம் இருந்த இடத்தில் சாம்பல் மேடாக இருப்பதைக் கண்டு பதறிப் போய் பார்த்த போது அன்னையின் திருச்சொரூபத்தில் ஒரு இடத்தில் தானும் புகையின் சாயல் கூட இல்லாதது கண்டு வியப்படைந்து போனார். இதைக் கேள்விப்பட்ட மக்கள் திரண்டுவந்து அன்னையின் தாழ்பணிந்து நன்றியுடன் வணங்கிச் சென்றனர். இதை இன்றும் மூத்த பரம்பரையினர் தம் பிள்ளைகளுக்கு சொல்லி வருகின்றனர்.

மண்குடிசையினால் அமைந்து ஓலைக் கீற்றுகளால் வேயப்பட்ட ஆலயத்தில் காலக்கிரமத்தில் மறைபரப்புப்பணிக்கென மேலை நாடுகளில் இருந்து வந்த குருக்கள் பலிப்பூசை நிறைவேற்றத் தொடங்கினர். மக்கள் தொகையும் பெருக்கமடைந்து 80 வீதத்துக்கு கூடுதலானோர் கத்தோலிக்க மதத்தினராக சில்லாலையில் வாழத் தொடங்கினர். இக்காலப்பகுதியில் தான் ஒல்லாந்தரின் படையெடுப்பும் கத்தோலிக்கமதத்தினருக்கும் ஆபத்துநேரிடத் தொடங்கியது. கத்தோலிக்கர் சுதந்திரமாக வழிபட முடியாது தலைமறைவாக வாழத் தொடங்கினர். தமது வழி மாதா என்றும் அவளை அழைத்தார். குடிசைக்கோயிலாக இருந்த அன்றைய ஆலயத்தில் தான் அவர் கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் தங்கியிருந்துதிருப் பலிநிறைவேற்றி தனதுஞானக் கடைமைகளை கடைப்பிடித்து வந்தார் என்பது வரலாறு கூறும் உண்மை. இவ்வாறு கதிரைச் செல்வியின் திருச் சொரூபத்தையும் யோசவ் வாஸ் முனிவரையும் காப்பாற்றிய பெருமை சில்லாலை மக்களையேசாரும்.

ஒல்லாந்தரின் கெடுபிடிகள் அற்றுப்போன காலத்தில் அன்னைக்கு ஒரு நிரந்தர ஆலயம் அமைக்கவென முன் முயற்சியில் ஈடுபட்டோர் பலர். 1836இல் ஜோசவ் பேதுறு அடிகளார் இவ்விடம் மறைபரப்பு பணிக்கென நியமிக்கப்பட்ட போது இன்று ஆலயம் இருக் பின் கீழ் வாழ்ந்த மக்களும் வாரத்தில் ஓரிரு தடவையாவது அவளது திருமுக தரிசனம் பெற்று தங்கள் முறையீடுகளை அவளிடம் சொல்லி அழுது தனியாக அல்ல சமூகமாக அவளை வந்து தரிசிக்க விண்ணப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள்.எத்தனை பயங்கரவாதம் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்த போதிலும் இம்முறையும் அவளின் பக்தர்கள் முழுமையாகச் சென்று ஒன்பது நாட்களும் அவளின் பாதத்தில் தங்கியிருந்து நிரந்தர சமாதானத்துக்காகவும் நிம்மதிவாழ்விற்காகவும் அவளது திருமகனிடம் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று விண்ணப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள்,

அவளது மகிமை எங்கும்சிறக்க இம்மலருக்கு முழுமையான பங்களிப்புச்செய்த ஒவ்வொருவரையும் எங்கள்கிராமத்தவர்களையும் நிறைவாக ஆசிர்வதித்து தம் திருமகனிடம் தொடர்ந்து அவள் பரிந்து பேசி அவர்கள் கேட்கும் வேண்டுதலுக்கு தக்க பதிலை பெற்றுத் தருவாளாக.

இதழாக்கம்:
**எஸ்.ஏ. நாதர்**

## பங்குத்தந்தையின் ஆசியுரை

சில்லையூர் மக்கள் தங்கள் பாதுகாவலிக்கு விழா எடுப்பதையும், சிறப்புமலர் வெளியிடுவது பற்றியும் நான் மகிழ்ச்சியடைகிறேன்,

போர்க்கால சூழல் மத்தியில் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி - அயல் கிராமங்களில் தஞ்சமடைந்து வாழ்கின்ற காலகட்டத்திலும், அவர்கள் தங்கள் பாதுகாவலியாம் 'கதிரைச்செல்வி'யில் உறுதியான விசுவாசம் கொண்டு, ஒன்று திரண்டு 'வந்தது வரட்டும்' என துணிவோடு அன்னைக்கு விழா எடுப்பது அவர்கள் மட்டில் விளங்குகின்ற ஆழ்ந்த இறைப்பற்றை எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றது.

எனது இரு வருட சில்லாலை பணி வாழ்விலே ஒரு வருடம் அவர்களுடன் முழுமையாகவும் ஒரு வருடம் அவர்கள் தங்கி வாழும் இடங்களில் சென்று அவர்களின் சுக-துக்கங்களில் பங்குகொண்டும் வந்தேன். அவர்கள் வாழ்வில் நான் கண்டது மரியன்னை மட்டில் ஆழ்ந்த விசுவாசமும்-ஆலயக் கடமைகளில் அவர்கள் காட்டிய அக்கறையுமே. "இடத்தால்'' அவர்கள் பிரிக்கப்பட்டு வாழ்ந்த போதிலும் ''இதயத்தால்'' அவர்கள் தங்கள் பாதுகாவலியை விட்டுப்பிரியாது வாரத்தில் ஓரிரு தடவைகளேனும் தங்கள் இருப்பிடங்களைப் பார்க்கும் நோக்கில் சில்லாலைக்கு வந்து தங்கள் அன்னையை தரிசித்துவிட்டுச் செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது. சில்லாலைப் பங்கு மக்களின் விசுவாச வளர்ச்சிக்கு சான்றாக 23 அருட் தந்தையர்களையும் பல்வேறு சபைகளைச் சார்ந்த 42 அருட்செல்விகளையும், மறைத்தொண்டாற்றும் 5 முழுநேரமறை ஆசிரியர்களையும் திருச்சபைக்குத் தந்துதவியதோடு இன்னும் பலரை திருச்சபைத் தோட்டத்திலே பணியாற்ற உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் விசுவாசம் வளரவும் அன்னையின் ஆசீர் நிறைவாகக் கிட்டவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அன்புடன்
**M.M.V. அமிர்தகுமார்.**
பங்குத்தந்தை.
சில்லாலை.


எல்லவருக்கும்
விசேடமாக
இவ்விதழுக்கு
அன்பளிப்புச் செய்த
அனைவர் மேலும்

கதிரைத்தாய்
கருணைமழை
பொழிவாவாக.



சில்லையூரை சீரோடாளும்
எல்லையில்லா கருணைத் தாயே!
நிலையாய் கதிரையில் அமர்ந்திருக்கும் தாயே!
அலையும் மாந்தர் எம்மையெல்லாம்
அலையாய் உன் பாதம் இன்று அழைத்தாயே.
உங்கள் வாழ்வின் நினைவு கூரத்தகு
நிகழ்வுகளுக்குநீண்ட ஆயுள் கொடுக்க
'வாழ்க்கை' புகைப்பட நிலையம்
LIFE PHOTO STUDIO
சில்லாலை
மானிப்பாய்
(மகளிர் கல்லூரியருகில்)


## சில்லாலை இளைய குரவரின் இனிய செய்தி

சில்லாலை மண்ணின் மகுடமும், மையமும் அங்கு கொலு வீற்றிருக்கும் கதிரைத்தாயின் திருக் கோவிலாகும். பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயேல் மக்கள் ஜெருசலேம் தேவாலயத்தைத் தங்கள் உயிராகக் கொண்டு வாழ்ந்ததைப் போன்று சில்லாலை மக்களையும் இயங்க வைக்கும் உயிர்நாடியாகத் திகழ்கின்றது எம் ஆலயம். எமது ஊரிலே வாழமுடியாது மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ள நிலையிலும் வாரத்தில் ஒரு நாளாவது அந்தக் கதிரைத்தாயின் கமலப்பாதங்களில் சரணடையக் கிடைக்கும் பேற்றினைப் பெரும் பேறாகவே இவர்கள் கொள்கின்றனர். வழமையான ஆரவாரங்களற்ற அதே வேளையில், அசாதாரண சூழ்நிலையில் இம்முறை அன்னையின் விழா கொண்டாடப்படுகின்றது. நாலாபக்கமும் சிதறடிக்கப்பட்டிருக்கும் எம் மக்களை மீளவும் ஒன்று கூட்டுகிறது அன்னையின் ஆரோகணப் பெருவிழா. எமது வெறுமையிலும், வறுமையிலும் அன்னையின் இன்றைய விழா எமக்கு நம்பிக்கையை ஊட்டுகின்றது. வாழ்வில் பிடிப்பை ஏற்படுத்துகின்றது. அன்னையின் அருட்கரம் எம்மோடு நீங்காது நிலைத்திருக்கின்றது என்ற உணர்வை எம்மில் எழுப்புகின்றது. அண்டிவந்தோரை அரவணைத்து ஆதரிக்கும் அன்னையின் பெருவிழாவினிலே சிந்தை குளிர்ந்து நிற்கும் அனைவருக்கும் திருநாள் நல்வாழ்த்துக்களை உவகையோடு தெரிவிக்கின்றேன். எம்மை சூழ்ந்து நெருக்கும் அவலங்கள் அகன்று அமைதி பிறக்க கதிரைச்செல்வி அருள் புரிவாளாக,

அருட்தந்தை சா. யோ. கு. ஜெயறஞ்சன்

நல்லூர் இளை நூலகம்

சிந்தனைக்கு

பிறரை ஏமாற்ற, துணிந்து முனைகிறோம்.
நமக்கே சிலந்தி வலையைப் பின்னி விடுகின்றோம்.
— சர் வால்ட்டர் ஸ்காட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-08-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## மக்களை ஏமாற்ற முயலும் பிரதமர்

"வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் திடமான பங்களிப்புச் செய்ய வேண்டிய கடமையுண்டு. தொடர்பு சாதனங்கள் உணர்ச்சியைத் தூண்டும் இராணுவ இரகசியங்களை வெளியிடாது விடுவதன் மூலம் போர் நடத்தும் முயற்சிக்கு உதவ முடியும்." இவ்வாறு சிறிலங்காவின் இளம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிப்படையாக வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில், ஒத்துழைப்புத்தர வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கோரிக்கை விடுத்திருந்தாலும், உண்மையில் போருக்கு மக்கள் தொடர்புத்துறையினர் உதவ வேண்டும் என்பதே அவரது கோரிக்கையாகும். அதாவது, இராணுவம் தொடர்பான செய்திகளில் அரசிற்கு பாதகம் விளைவிக்கக் கூடிய செய்திகளை பிரசுரிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்பதே அவரது விருப்பமாகும்.

அதாவது இராணுவம் குறித்த ரகசியங்கள் வெளிவராமல் இருக்கும் பட்சத்தில், புலிகளை தோற்கடிக்க இலகுவாக இருக்கும் என்பதே பிரதமர் கூறும் விளக்கமாகும். ஆனால், உண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கோருவது அதுவல்ல.

ஏனெனில், சிறிலங்கா பத்திரிகைகள் இதுவரை அதிர்ச்சி தரும் இராணுவ இரகசியங்கள் எதையும் வெளியிட்டதாகஇல்லை பெரும்பாலான தகவல்கள் முடிவடைந்த சண்டைகள் பற்றியும், அவற்றின் வெற்றி தோல்விகளைப் பற்றியுமே வெளியிட்டுள்ளன. அதிலும், பெரும்பாலானவை அரசாங்கத்தின் அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டவையாகவே இருந்துள்ளன. அப்பாவிகளைக் கொன்றுவிட்டு விடுதலை புலிகள் எனக் கூறும் லங்காபுவத்திற்கு பேரினவாத பத்திரிகை எந்த விதத்திலும் குறைந்தவையல்ல.

இதேவேளை, சில பத்திரிகைகள் இராணுவத் தலைமைப்பீடத்திற்குள் உள்ள சிக்கல்கள் பற்றி சில தகவல்களை வெளியிட்டுள்ளன. ஆனால், அவை இராணுவ இரகசியங்களும் அல்ல, மறைக்க கூடியவையும் அல்ல. அதுவும் தனபதிகள் மட்டத்தில் ஒத்துழைப்பு அவசியம் என்ற நோக்கிலேயே

# எவரிடமும் நான் மன்னிப்புக் கோரப்போவதில்லை

## அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

நான் எவரிடமும் மன்னிப்புக் கோரப் போவதில்லை என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளரிடம் பேசிய அநுரா பண்டாரநாயக்க மேலும் கூறுகையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் நான் என்றும் நடந்ததில்லை அவ்வாறான தவறாற்றை நான் நினைக்கவும் இல்லை. எனவே எவரிடமும் மன்னிப்புக்கோர நான் தயாராக இல்லை எனத் தெரிவித்தார்.

அதனுடன் என்மீது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடம் பல குற்றச் சாட்டுக்களை சுமத்தியுள்ளது. அதில் ஒன்று நான் கையாலாகாதவன் என்பதாகும் என்னால் எதுவும் செய்ய முடியாது என்று சொல்பவர்கள் அன்று என்னை எதிர்க் கட்சித்தலைவர் பதவிக்கு ஏன் தெரிவு செய்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன். ஆறு ஆண்டு காலமாக பாராளுமன்றத்தில் எட்டு எம்.பிகளுடன் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை நான் வகித்துள்ளேன். இவ்வாறான ஒரு பொறுப்பை என்னிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்?

ஐ தே க ஆதரவாளர்கள் என்னைச் சூழ்ந்து இருப்பதாக குறைகூறப்படுகிறது. கட்சியை உருவாக்கிய எனது தந்தையும் ஐ தே கவில் இருந்து வந்தவர்தானே ஐ தே.க சார்பில் அத்தனகல்ல தொகுதியில் போட்டியிட்ட சூரியபெருமாவிற்கு பொதுச் செயலாளர்பதவியும், தாய ரின்குடியுரிமை ஒழிப்பை ஆதரித்து வாக்களித்த ஐ தே. க. உறுப்பினர் நெவில் பெர்னாண்டோவிற்கு உதவிப் பொதுச் செயலாளர் பதவியும் எப்படி வழங்கப்பட்டது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## தமிழர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் எதுவுமில்லை

### தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

வவுனியா தபால் ரயிலில் இடம்பெற்ற கொள்ளை, வேல்விழாவின் போது கொழும்பு பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவிலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு போன்ற சம்பவங்கள் தமிழர்களின் பாதுகாப்புக்கு இந்நாட்டில் உத்தரவாதமெதுவும் இல்லை என்பதையே உணர்த்துவதாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் பல தடவைகள் எடுத்துக்கூறியும் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் தமிழர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டே வருகின்றார்கள் என்றார்.

தமிழர்களிடம் அடையாள அட்டைகளைச் சோதனை செய்வதாகக் கூறி வழிப்பறி பேர் வழிகள் தங்கள் கைவரிசையைக் காட்டுகிறார்கள். தமிழர்கள் அகால வேளைகளில் அடாத்தாக கைது செய்யப்படுவதுடன், சந்தேகத்தின் பேரிலும் இந்த மோசடிப்பேர் வழிகளால் கைது செய்யப்படுகிறார்கள் இது விடயத்தில் அரசாங்கம் உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## பொருளாதார நிலைமோசம் எதிர்க் கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

எமது நாட்டின் பொருளாதாரம் மிகமோசமான நிலையில் உள்ளது பொது மக்கள் தங்கள் நலன்களைப் பேண அரசுக்கு எதிராக கொதித்தெழும் சூழ்நிலை உருவாகிவிட்டது

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தாமசிறி சேனநாயக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகவங்கி, சர்வதேச நாணயசபை ஆகியவற்றிடமிருந்து இம்முறை 840 ... தப்படும்.

ரயில்வேயை அதிகார சபையாக மாற்றும் சட்டமூலத்தை பாராளுமன்றம் அங்கீகரித்து விட்டது. இனி பாடசாலைப் பிள்ளைகள், தொழிலாளர்கள் ஆகியோரின் சீசன் டிக்கட் பிரயாண வசதி ஆகியவற்றுக்கும் வெட்டுவிழப் போகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### உணவு முத்திரை வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வேலணை உ. அ. அதிபர் பிரிவிற்குட்பட்ட இடம்பெயர்ந்த மக்களிற்கான உலர்உணவு முத்திரைகள் அந்தந்தப் பிரிவு கிராமசேவகர்களால் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் அதற்கான உலர் உணவு விநியோகமும் வேலணை ப.நோ. கூ. சங்கத்தில் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. [84]

### பௌத்த பிக்கு அடித்துக் கொலை

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்தில் உள்ள விகாரையொன்றின் மதகுரு கத்தியால் வெட்டியும் பொல்லால் அடித்தும் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பகமுன பொலிஸ் பிரிவில் உள்ள சம்புது விகாரையின் பிரதம குருவான கலஹி டியாவ ஸ்ரீ சுமண என்ற பௌத்த மதகுருவே கொல்லப்பட்டுள்ளார்.

இவரின் கொலை தொடர்பாக மூன்று பேரைபொலிசார் கைது செய்துள்ளார்கள்.

## காமினிக்கு அமைச்சர் பதவி விரைவில் கிடைக்கலாம்?

(கொழும்பு)

ஐ. தே கவுடன் கூட்டுச் சேருவது தொடர்பான பேச்சுக்களை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாகவும், இறுதிக்கட்டத்தை பேச்சுகள் நெருங்கிக்கொண்டிருப்பதாகவும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

மேலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையன்று இணைப்பு பற்றியசெய்தி பகிரங்கப்படுத்தப்படலாம்என்றும் காமினி திசாநாயக்கஉட்பட இருவருக்குமட்டுமே பாராளுமன்றஉறுப்பினர் பதவி வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் காமினிதிசாநாயக்காவிற்கு அமைச்சர் பதவியும் மாகாண சபைகளுக்கு தெரிவானவர்களுக்கு அந்தந்த மாகாணங்களின் அமைச்சர் பதவிகளும் மற்றும் சிலருக்கு தூதுவர் பதவிகளும் சிலருக்கு கூட்டுத்தாபன பணிப்பாளர் பதவிகளும் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## குற்றச்செயல்களுடன்தொடர்பு 205 பொலிசார் பதவிநீக்கம்

(கொழும்பு)

கடுமையான குற்றச்செயல்களுடன் தொடர்பு கொண்டிருந்தமைக்காக கடந்த பதினெட்டு மாதங்களில், 205 பேர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்

கொலை, கொள்ளை, பெண்களுடன் துர்நடத்தை என்பன போன்றவற்றில் ஈடுபட்டமைக்காக 94 பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டனர். இது தவிர 29 பேர் லஞ்சக் குற்றத்திற்காகவும் கைது செய்யப்பட்டனர்

மேலும் ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 12 பேர் சப்இன்ஸ்பெக்டர்கள் 25பேரும் உட்பட 102பேருக்கு எதிராக குற்றப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இது தவிர கடமையைச் செய்யாமை, சட்டவிரோத மரவியாபாரம் லஞ்சம் வாங்குதல், ஒழுங்கு மீறியமை என்பவற்றிற்காக பொலிஸ் அதிகாரிகள் 35 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடாத்தப்பட்டும் வருகிறதாம்.

## ஐ.தே.கவுடன் இணைப்புஏன்? காமினியின் விளக்கம்

(கொழும்பு)

எமது கட்சியைச் சேர்ந்த சிலருக்கு எதிராக கொலைக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன வேறு சிலர் தொழில்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். இவைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என நான் சிந்தித்தேன். இதற்காகவே அரசாங்கத்துடன் இணக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நான் முன்வந்தேன்

இரத்மலானையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி காரியாலயமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்க இவ்வாறு கூறினார்.

ஐ தே.க.சரியான முறையில் இந்நாட்டை பரிபாலித்தமையினால் எம்முடன் இணக்கம் காண விரும்பின் நாம் அதனை ஏற்றுக்கொள்வோம் ஆனால், பிரேமதாசாவின் சிந்தனை தன்னிச்சைப் போக்கு. தனிநபர் பரிபாலனம் ஆகியவற்றை மீண்டும் செயல்படுத்த ஐ தே.க முயன்றால் அதனை நாம் வன்மையாகக் கண்டிப்போம்: எதிர்ப்போம்.

இந்த நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ உள்ளன. பொலிஸ் நிலையம் சென்றால் புகார்களைப் பதிவு செய்கிறார்கள் இல்லை என்ன நாடு இது?

உலக வங்கி உதவி புரியாது போனால் இரத்மலானையிலிருந்து வெள்ளவத்தை வரை மாவுக்கும் தீப்பெட்டிக்கும் நீண்ட கியூவில் நிற்கவேண்டி வரும். இன்று தோட்டங்கள் சீர்குலைந்துள்ளன இன்று யுத்தத்திற்காக 2500 கோடி செலவிடப்படுகிறது. அதனால் பாடசாலை நிறுவமுடியாது என்கிறார்கள். ஆஸ்பத்திரிகளில் டாக்டருக்குத் தட்டுப்பாடு. இப்படியிருக்க எப்படி இந்த நாட்டை சீராக்க முடியும்? என்று தமதுரையில் அவர் மேலும் குறிப்பிட்டார்

# யாழ். ரயிலில் திருட்டுப்போனது 3 லட்சத்திற்கும் மேல்!

## வெளிநாட்டவரிடமும் கொள்ளை

(கொழும்பு)

கமராக்களும் 200 டொலர் ... பேசாதே இக் கொள்ளைச் சம்

### நேர்முகப் பரீட்சை

யாழ் மத்திய கல்லூரியில்

தோற்கடிக்க இலக்காக இருக்கும் என்பதே பிரதமர் கூறும் விளக்கமாகும். ஆனால், உண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கோருவது அதுவல்ல.

ஏனெனில், சிறிலங்கா பத்திரிகைகள் இதுவரை அதிர்ச்சி தரும் இராணுவ இரகசியங்கள் எதையும் வெளியிட்டதாக இல்லை பெரும்பாலான தகவல்கள் முடிவடைந்த சண்டைகள் பற்றியும். அவற்றின் வெற்றி தோல்விகளைப் பற்றியுமே வெளியிட்டுள்ளன. அதிலும், பெரும்பாலானவை அரசாங்கத்தின் அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டவையாகவே இருந்துள்ளன. அப்பாவிகளைக் கொன்றுவிட்டு விடுதலைப் புலிகள் எனக் கூறும் லங்காபுவத்திற்கு பேரினவாதப் பத்திரிகை எந்த விதத்திலும் குறைந்தவையல்ல.

இதேவேளை, சில பத்திரிகைகள் இராணுவத் தலைமைப்பீடத்திற்குள் உள்ள சிக்கல்கள் பற்றி சில தகவல்களை வெளியிட்டுள்ளன. ஆனால். அவை இராணுவ இரகசியங்களும் அல்ல, மறைக்க கூடியவையும் அல்ல. அதுவும் தளபதிகள் மட்டத்தில் ஒத்துழைப்பு அவசியம் என்ற நோக்கிலேயே வெளியிடப்பட்டவை.

ஆனால், சிறிலங்கா பத்திரிகைகள் சிங்கள மக்கள் மனதில் இனவெறியையும் போர் வெறியையும் ஊட்டியதுடன் ஒப்பிடும் இடத்து அவர்கள் வெளியிட்டதாகக் கூறப்படும் இராணுவம் பற்றிய தகவல்கள் அற்பசொற்பமானவை. கருத்திற் கொள்ளக் கூடியவையும் அல்ல இலங்கையில், இன்று ஓர் அமைதி திரும்பாமைக்கும், சமாதானம் உருவாகாமைக்கும், சிங்கள அரசியல்வாதிகளும், பௌத்தமத அடிப்படைவாதிகளும் எந்தளவிற்கு காரணமோ அதே அளவு காரணத்தை பத்திரிகைகளும் கொண்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என சிங்கள அரசியல்வாதிகள் சில வேளை பேச்சுக்குத்தான் கூறிக் கொண்டாலும் பேரினவாதப் பத்திரிகைகள் ஒருபோதும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழரின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை என்றோ, தமிழ் மக்கள் சிங்களவருடன் சம அந்தஸ்துக் கொண்ட மக்கள் என்றோ அவை ஏற்றுக்கொள்ளவுமில்லை. தமிழர் பிரச்சினையை ஒரு ''பயங்கரவாதப் பிரச்சினை'' என்றே எப்பொழுதும் அவை தெரிவித்தும் வந்தன.

மேலும், இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளை குழப்பியடித்ததில் பெரும் பங்கு எப்போதும் சிங்களப் பத்திரிகைகளையே சார்ந்திருந்தன 1991இன் பிற்பகுதியில் அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிகளுக்கு பெரும் தடைக்கல்லாக இருந்தவையும் இப்பத்திரிகைகளே. இதேபோன்று சமாதான முயற்சியை மேற்கொண்ட அங்கிலிக்கன் ஆயர் போன்றோரை மிகமோசமாகத் தாக்கி முட்டுக்கட்டை ஏற்படுத்தியவையும் இப்பத்திரிகைகளே.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா யுத்தத்திற்கான ஒத்துழைப்பு என எதைக் கோருகின்றார் யுத்தத்தில் ஏற்படும் தோல்வியை வெளியிட்டு இராணுவத்தினருக்கும், பேரினவாதிகளுக்கும் சோர்வை ஏற்படுத்தாதீர்கள் என்பதைத்தவிர அவர்கள் கோருவதற்கு எதுவுமில்லை இதன் மூலம் யுத்தத்தின் தோல்விகளை மறைக்கவும், சிங்கள மக்களை தொடர்ந்தும் ஒரு மாயையில் வைத்திருக்கவுமே ரணில் விரும்புகிறார் போல தெரிகின்றது இது. சிங்கள மக்களை அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் சேர்ந்து ஏமாற்றுவதாகவே முடியும். இது சிறிலங்காவிற்கு வேறு எந்த நன்மையும் பயக்கப் போவதில்லை.

## எதிர்க் கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

எமது நாட்டின் பொருளாதாரம் மிகமோசமான நிலையில் உள்ளது பொது மக்கள் தங்கள் நலன்களைப் பேண அரசுக்கு எதிராக கொதித்தெழும் சூழ்நிலை உருவாகிவிட்டது

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தாமசிறி சேனநாயக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகவங்கி, சர்வதேச நாணயசபை ஆகியவற்றிடமிருந்து இம்முறை 840 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதிஉதவிபெற நிபந்தனைகள் பலவற்றுக்கு அரசு இணங்கியுள்ளது. பொதுமக்களின் சேமநலத்திட்டங்கள் பலவற்றுக்கு இதன் மூலம் வெட்டு விழப்போகிறது.

முன்னைய அரசாங்கங்களின் ஆட்சியில் உலக வங்கி சர்வதேச நாணயசபை ஆகியவற்றிடமிருந்து எந்த அடிப்படையில் நிதி உதவி கிடைக்கிறது என்ற விபரங்கள் தெளிவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆனால் இந்த அரசு அவற்றைச் சமர்ப்பிப்பதே இல்லை.

ஜனசவிய, உணவு முத்திரை பாடசாலை மாணவர்களின் இலவச சீருடை, மதிய உணவு மற்றும் கல்வி வசதிகளை நிறுத்த உலகவங்கியும் சர்வதேசநாணய சபையும் விதித்த நிபந்தனைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. படிப்படியாக இந்த வசதிகள் நிறுத்தப்படும்.

ரயில்வேயை அதிகார சபையாக மாற்றும் சட்டமூலத்தை பாராளுமன்றம் அங்கீகரித்து விட்டது. இனி பாடசாலைப் பிள்ளைகள், தொழிலாளர்கள் ஆகியோரின் சீசன் டிக்கட் பிரயாண வசதி ஆகியவற்றுக்கும் வெட்டுவிழப் போகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்தில் உள்ள விகாரையொன்றின் மதகுரு கத்தியால் வெட்டியும் பொல்லால் அடித்தும் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பகமுன பொலிஸ் பிரிவில் உள்ள சம்புதுவிகாரையின் பிரதம குருவான கலஹிடியாவ ஸ்ரீ சுமண என்ற பௌத்த மத குருவே கொல்லப்பட்டுள்ளார்.

இவரின் கொலை தொடர்பாக மூன்று பேரை பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

டன் இணக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நான் முன்வந்தேன்

இரத்மலானையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி காரியாலயமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்க இவ்வாறு கூறினார்.

ஐ.தே.க. சரியான முறையில் இந்நாட்டை பரிபாலித்தமையால் எம்முடன் இணக்கம் காண விரும்பின் நாம் அதனை

வளவோ உள்ளன. பொலிஸ் நிலையம் சென்றால் புகார்களைப் பதிவு செய்கிறார்கள் இல்லை என்ன நாடு இது?

உலக வங்கி உதவி புரியாது போனால் இரத்மலானையிலிருந்து வெள்ளவத்தை வரை மாவுக்கும் தீப்பெட்டிக்கும் நீண்ட கியூவில் நிற்கவேண்டி வரும். இன்று தோட்டங்கள் சீர்குலைந்துள்ளன இன்று யுத்தத்திற்காக 2500 கோடி செலவிடப்படுகிறது. அதனால் பாடசாலை நிறுவமுடியாது என்கிறார்கள். ஆஸ்பத்திரிகளில் டாக்டருக்குத் தட்டுப்பாடு. இப்படியிருக்க எப்படி இந்த நாட்டை சீராக்க முடியும்? என்று தமதுரையில் அவர் மேலும் குறிப்பிட்டார்

# யாழ். ரயிலில் திருட்டுப்போனது 3 லட்சத்திற்கும் மேல்!

## வெளிநாட்டவரிடமும் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு கோட்டையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற தபால் ரயிலில் உறங்கல் இருக்கையில் பயணம் செய்த பயணிகளிடமிருந்து மூன்று இலட்சப ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள். பணம் சூறையாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த ஏழாம் திகதி இரவு இடம்பெற்றது

நாங்கள் பொலிஸ். அடையாள அட்டையைப் பார்க்க வேண்டும்' என்று தமிழர் பயணம் செய்த உறங்கல் இருக்கை (பேர்த்) கதவைத் திறக்கும் படி கேட்டதாம் குரல். கதவு திறந்த போது திருடர்கள் உள் நுழைந்து தமிழர் ஒருவரையும் அவரது மனைவியையும் கைகளைக்கட்டி, வாய்க்கு பிளாஸ்டர் ஒட்டிவிட்டு அங்கிருந்த பொருள்களை சூறையாடினார்கள். பின்னர் ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளிடமிருந்தும் கமராக்களும் 200 டொலர் நோட்டுக்களையும் கொள்ளையர்கள் அபகரித்துள்ளனர்.

பின்னர் வவுனியா வியாபாரிகள் இருவரின் கைகளைக் கட்டி வாய்களுக்கு பிளாஸ்டர் ஒட்டி அவர்களிடம் காணப்பட்ட பொருள்களையும் கொள்ளையர்கள் சூறையாடினார்கள்.

முதலில் கைகள் கட்டப்பட்ட நிலையிலிருந்த தமிழர் ஒருவாறு கைகளை அவிழ்த்துக் கொண்டு அபாயச் சங்கிலியை இழுத்த போது ரயிலின் வேகம் தணிந்தது. இதை அவதானித்த கொள்ளையர்கள் ஒருவர் பின் ஒருவராக குதித்துத் தப்பித்துக் கொண்டனர்.

ரயில் பொல்காவலை ரயில் நிலையத்தைக் கடந்து சென்ற போதே இக் கொள்ளைச் சம்பவம் நடந்தது.

இதே பேர்த் வண்டியில் உறங்கல் படுக்கையை பதிவு செய்து அதில் பயணிகள் போல புறப்பட்ட இருவரே இந்த கொள்ளையின் சூத்திரதாரிகள். அவர்கள் பயணம் செய்த பேர்த் அறை வெறிச் சோடிக் காணப்பட்டது. பொல்காவலையில் வேறு இருவர் இவர்களுடன் சேர்ந்திருக்கிறார்கள்.

இக்கொள்ளையர்கள் பொலிஸார் மாதிரி பேசும் போது சிங்களம்கலந்த ஆங்கிலத்திலேயே பேசினார்கள்.

### நேர்முகப் பரீட்சை

யாழ் மத்திய கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான ஆண்டு 1 ற்குரிய நேர்முகப் பரீட்சை இன்று காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளதாக யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார். (17)

### கிருஷ்ணய்யர் உண்ணாவிரதம்

(சென்னை)

இந்தியாவில் இருந்து இலங்கைத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாமெனக் கோரி இந்திய உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் வீ ஆர். கிருஷ்ணய்யர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்

போதைப் பொருள் கடத்தல் வழக்கில்

## எழுபது வயது மூதாட்டிக்கு 14வருட கடூழியச்சிறை

(கொழும்பு)

ஹெரோயின் கடத்திய எழுபது வயது மூதாட்டி ஒருவருக்கு நீர்கொழும்பு நீதவான் பதின்நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

1986-ம்ஆண்டு ஜுன் 22-ம் திகதியன்று திருவனந்தபுரத்திலிருந்து கொழும்பு திரும்பிய இப் பெண்மணியிடம் 278 5 கிராம் ஹெரோயின்போதைப் பொருள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் இப் பெண்மணி வெவ்வேறு கடவுச் சீட்டுகளுடன் அடிக்கடி இந்தியா சென்று வந்திருந்தது தெரியவந்தது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக நடந்த வழக்கில் ஹெரோயின் வைத்திருந்தமைக்காக ஏழு வருடங்களுக்கும். கடத்திக் கொண்டு வந்தமைக்காக ஏழு வருடங்களுமாக 14 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதிபதி மேலும் கூறுகையில், மூன்றாவது பரம்பரை ஒன்றினை அழிப்பதில் ஈடுபட்டுள்ளாய் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை ஊட்டும் விதத்தில் உன்னைத் தூக்கில் போடுவதுகூட நல்லதுதான் என்றும் தெரிவித்தார்.

# மூப்பனார் வாழப்பாடி நினைத்தால் ஏழு நாட்களில் ஆட்சி மாறும்

## — திருநாவுக்கரசு தெரிவிப்பு

(சென்னை)

மூப்பனாரும். வாழப்பாடியும் முடிவெடுத்தால் தமிழ் நாட்டில் 7 நாட்களில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று எம் ஜி ஆர் அ தி மு.க தலைவர் திருநாவுக்கரசு கூறினார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போது அவர் மேலும் கூறியதாவது:

ஜெயலலிதா பயப்படும் அளவுக்கு இன்று எம் ஜி ஆர் அ.தி.மு.க மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. மத்திய அரசைக் கவிழ்க்க இவர் முயற்சி செய்தும் அது நடக்கவில்லை. மத்தியஅரசு 2 முறை கருணாநிதி ஆட்சியை கவிழ்த்து இருக்கிறது எம்.ஜி ஆர் ஆட்சியை ஒருமுறை கவிழ்த்தது. மத்திய அரசை எதிர்த்தால் என்ன நடக்கும் என்பது இவருக்கு நன்கு தெரியும். இவர் இன்னும் 2 மாதங்கள் தான் முதல அமைச்சராக இருப்பார் அதற்குள் மக்கள் எதிர்பார்க்கும் மாறுதல் வரும்.

நாளையே மூப்பனாரும் வாழப்பாடியும் சந்தித்து பேசிவிட்டு உங்களால் முடிந்ததை செய்யுங்கள் என்று சொன்னால் இன்னும் 1 வாரத்தில் மாறுதல் நடக்கும்.

ஜெயலலிதாவை நான்தான் பொதுச்செயலாளராக கொண்டு வந்தேன். தேர்தல் நேரத்தில் அவர் முதல்வர் என்று சொன்னவர்கள் காங்கிரஸ் கட்சியினர். நான் சொல்லவில்லை முதல் அமைச்சர் பதவி பறிபோனால் ஜெயலலிதா அமெரிக்கா அல்லது ஆந்திராவுக்கு ஓடிவிடுவார். தமிழ் நாட்டில் பதவி இழந்து எதிர்க்கட்சியாக அவரால் செயல்பட முடியாது.

என் மீது இதுவரை அவர் இரண்டு வழக்குகளைப் போட்டு இருக்கிறார். கடந்த இரண்டரை ஆண்டில் அவர் ஆயிரம் கோடி ரூபாய் சம்பாதித்து இருக்கிறார் அப்படி சொன்னதால் என் மீது அவர்வழக்கு தொடர தயாரா? அ. தி மு க ஆட்சியில் அரிசி, பால், மின்சாரம். நிலவரி கட்டணம்உயர்ந்துவிட்டது ஏழை மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது தான் எம். ஜி ஆர் ஆட்சியா? ஆட்சி மாறினால்தான் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நடக்கும் என்றும் கூறினார்.

ஈழநாதம்

## அரச ஊழியர் வீட்டில் 1,300கிராம்போதைபொருள்

சென்னை நகரில் அரச ஊழியர் ஒருவரின் வீட்டிலும், அலுவலகத்திலும் சேர்த்து மொத்தம் 1,300 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மத்திய போதைப் பொருள் கட்டுப் பாட்டுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் இந்த அரச ஊழியரும் கைதாகியுள்ளனர்.

உலக சந்தையில் இதன் பெறுமானம் 1 கோடியே 30 லட்சம் ரூபா என்று கூறப்படுகிறது.

## பல்கலைக் கழக அனுமதி விண்ணப்பம் கோரப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கு 1992 க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து அடுத்த மாதம் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனால் இதுவரை காலமும் நிலவிய இரண்டு வருட காலதாமதம் ஒன்றரை வருடத்தால் குறையும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## புதிய குருமுதல்வர்கள் ஆயரால் நியமனம்

யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் மறைப்பணிகளை மேற்கொள்வதற்காக நான்கு குருமுதல்வர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ்.மறைக்கோட்டத்துக்கு யாழ். பேராலய பங்குத் தந்தையாக அருட்திரு. அன்ரன் இராஜநாயகம் அவர்களும், மானிப்பாய் மறைக்கோட்டத்துக்கு அருட்திரு. ஜேம்ஸ் பத்திநாதன் அவர்களும், பருத்தித்துறை மறைக்கோட்டத்துக்கு அருட்திரு. பி. எம். இம்மனுவல் அவர்களும், கிளிநொச்சி மறைக்கோட்டத்துக்கு அருட்திரு. எம். ஈ. பயஸ் அவர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதே சமயம் மனித முன்னேற்ற நிலைய இயக்குநராக அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன் அடிகளாரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## ஜப்பான் புதிய அரசில் கட்சிகளுக்கிடையே விரிசல்

ஜப்பான் புதிய கூட்டரசாங்கத்தை ஏற்படுத்தி இருக்கும் கட்சிகளுக்கு இடையே பூசல்கள் தோன்றியிருப்பதாகவும் இதனால் இந்த அரசு நிலைக்குமா என்ற ஐயம் தோன்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் 38 ஆண்டுகளாக ஆட்சி செய்த லிபரல் ஜனநாயகக் கட்சியை தோற்கடித்து இக்கூட்டணி அரசாங்கம் ஏற்பட்டது தெரிந்ததே.

## வீரவணக்கக் கூட்டம்

தென்மராட்சிக் கோட்டம் பளை வட்டத்தில் 7ம், 8ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு முகமாலைச் சந்தி அன்னை வேளாங்கன்னி கோயிலுக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விமானப்படையில் ஒருவர் பலி

(கொழும்பு)

அம்பாறை பகுதியில் விமானப் படையினர் ஒருவர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானதாக பொலிஸ் தலைமையகக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முகாமுக்குப் பின்னால் குளிக்கச் சென்றபோது விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கி எல்ல பொலிஸ் பிரிவிலுள்ள புறாக்குணவ விமானப்படைத் தளத்தைச் சேர்ந்த ஆர். எம். தர்மபால என்பவரே பலியானார்.

எழுதுவினைஞர் சேவையின்

## வினைத்திறன் காண் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பொது எழுதுனர் சேவையின் இரண்டாம் தரம் ''அ'' பிரிவில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதற்கான தகவல் ஒன்று யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளருக்குவடகிழக்குமாகாண சபையில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

இப்பரீட்சைக்கு சுமார் மூவாயிரம் விண்ணப்பங்கள் வடகிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பரீட்சை சம்பந்தமான மேலதிக விபரங்கள் எதுவும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. (பா)

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

'Wild Geese'

# 'செவன' சீட்டிழுப்பின் மோசடிகள் அம்பலம்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச தனது அரசியல் நடவடிக்கைகளுக்குப் பணம் பெறும் பொருட்டு 'செவன' அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பை ஆரம்பித்ததாகவும் இது ஆரம்பித்து இரண்டு வருடகாலப் பகுதியில் பெறப்பட்ட 48 கோடி ரூபா பணத்திற்கு என்ன நடந்தது என்பதற்கு எதுவித கணக்கும் இல்லை எனவும் தெரியவந்துள்ளது.

இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. சி. லோறன்ஸ் உட்பட பிரேமதாசவின் நண்பர் குழுவினால் நடாத்தப்பட்டுவந்ததாகவும் இதற்கு முகாமைத்துவம் எதுவும் இருக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இதற்கென கணக்காய்வாளர் எவரும் நியமிக்கப்படவில்லை என்றும்இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்போது ஜே. ஆர் ஜெயவர்த்தனவிற்கும் பிரேமதாசவிற்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்பை அடுத்து கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1985-87ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தச் சீட்டிழுப்பின் வருமானத்தில் ஒரு பகுதியான 48 கோடி ரூபா வரையிலான பணம் எவ்வித கணக்குமின்றிச் சென்றுவிட்டதாக கணக்காய்வாளர் கூறியுள்ளார்.

மேலும் இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு அச்சடிக்கப்பட லண்டன் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட கட்டளையின் பெறுமானம் மிகக் குறைந்த கேள்வியிலும் எட்டரைக் கோடி ரூபா அதிகமாகும். இதற்கு சர்வதேச அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் அச்சடித்து அவர்களுக்கு அனுபவம் உண்டு என தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் விற்பனைப் பிரதிநிதிகள் இச் சீட்டுகளில் மோசடிகள் செய்யத் தொடங்கினர். இவ் விடயம் வெளிவந்ததும் குறிப்பிட்ட அச்சகத்துடன் ஆலோசனை நடத்த லோறன்ஸ் லண்டன் அனுப்பப்பட்டார். இவருக்கு போக்குவரத்துச் செலவு உட்பட இருபத்திநான்கரை லட்சம் ரூபா இக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டலாபச் சீட்டுழுப்பு நடத்துவதானால் பெறவேண்டிய அரச அனுமதி கூட 'செவன' சீட்டிழுப்புக்குப் பெறப்படவில்லை. சீட்டுகளில் முறையாக இலக்கங்கள் இடப்படவில்லை. சீட்டுவழங்கும், பரிசு வழங்கும் அனுமதியோ, பரிசு வழங்கப்படும் இறுதித் திகதியோ இடப்படவில்லை. இச்சீட்டிழுப்பிற்கு வருடாந்த வரவு செலவு கணக்கோ பரிசுப் பணச் சிபார்சோ கிடையாது என கணக்காய்வாளர் கூறியுள்ளார்.

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் புறநிலைப் படிப்புகள் அலகு கிராம அலுவலர் பயிற்சிநெறி நிறைவு நாள் விழாவும், சான்றிதழ் வழங்குதல் வைபவமும் இன்று பகல் 10 மணிக்கு பல்கலைக் கழகபுவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொள்வார்.

மதிய

தொகை 1992க்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளை இலவச சீருடைக்காக 600,000,000 ரூபா ஒதுக்கப்பட்டது. இந்தச் செலவை மட்டுப்படுத்துவது பற்றி ஆராயவே இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## இன்று புலமைப்பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இன்று நடைபெற இருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு 94 பரீட்சை நிலையங்களில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இப் பரீட்சைக்கு இலங்கை முழுவதும் உள்ள மூவாயிரம் பரீட்சைநிலையங்களில் சுமார் 3,47,000 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

மேலும் இப் பரீட்சைக்கு என்றுமில்லாதவாறு அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் மேற்படி பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களிற்கு மிகவும் கூடிய பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு.இரா. சுந்தரலிங்கம்தெரிவித்துள்ளார்.(பா)

# மிகவும் மோசமான நிலையில் தமிழக அகதி முகாம்கள்

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு அகதிகளாக வந்தவர்களை குடியமர்த்த மொத்தம் 131 முகாம்கள் தமிழ் நாட்டில் உள்ளன. ஆனால் அந்த முகாம்களின் நிலைமைகளும் அங்குள்ள வசதிகளும் மிகவும் மோசமாக உள்ளதாக ஐ நாவின் அகதிகளுக்கான அமைப்பாளருக்கு அரசசார்பற்ற பொது நிறுவனங்கள் பலதடவைகள் முறையிட்டிருந்தன.

இந்தக் குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட யு. என். எச். சி. ஆர் இந்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

இதேவேளை அம்முகாம்களில் உள்ள நிலைமைகள் அத்தனை மோசமாக இருப்பதனாலேயே அங்கிருந்து மீண்டும் இலங்கைக்கே திரும்பிப் போவதைத் தவிர அகதிகளுக்கு வேறுவழியே] கிடைக்

பாதுகாப்பு

எடுத்துள்ளார்கள் இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு விசாரணை மேற்கொண்டுள்ளது.

இப் பிரச்சினை பாதுகாப்பு அதிகாரிகள் உயர்மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் ஆராயப்பட்டதாகவும் பொலிஸ் நிர்வாகத்தில் அரசியல் வாதி

காமல் போய்விட்டது என வோஷிங்டனில் இருக்கும் ஏசியாவோச் தெரிவித்துள்ளது.

யு. என். எச். சி. ஆர் விடுத்த இக் கோரிக்கையை இந்தியா நிராகரிக்கும் என நம்பப்படுகிறது. இலங்கை அகதிகள்பலாத்காரமாகவெளியேற்றப்படுகிறார்களா என்பதை அவதானிக்கும் பொறுப்பு மட்டுமே யு. என். எச். சி. ஆர் இற்கு உண்டு எனவும் முகாம்களை பார்வையிடவோ வேறு விடயங்களில் தலையிடவோ உரிமை இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக முகாம்பொறுப்பாளர்கள் கருத்து தெரிவிக்கையில் யு. என். எச். சி. ஆரின்செயற்பாடு விரிவுபடுவதையோ அல்லது வேறு தலையீடுகள் இருப்பதையோ இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அகதிகள்இந்தியாவில் தங்குவதால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் என்ற முடிவில் அரசு தீவிரமாகவுள்ளதால் முகாம்களில் வசதிகளை ஏற்படுத்துவதால் அகதிகள் தங்கிவிடுவார்கள் எனவும் பாடசாலைகளில் முகாம் சிறுவர்களுக்கும் அனுமதி வழங்குவதை கூட அரசு தடைசெய்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இதேவேளை அங்கு கடமையாற்றிய பொதுஸ்தாபனங்களையும் அவர்களது கடமைகளை நிறுத்துமாறும் அரசு அறிவித்துள்ளது

திருமலை

கடந்த இரண்டு வாரங்களில் திருக்கோணமலை நகரத்தை அடுத்துள்ள பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக புலனாய்வு அறிக்கைகள் தெரியப்படுத்துவதாக கூறப்படுகிறது, செவ்வாய்க்கிழமை இரவு குறைந்தது 50 பேரைக்கொண்ட புலிகள் குழுவொன்று குச்சவெளி மீன்பிடிக் கிராமத்தில்பொது மக்கள் போக்குவரத்தைச் சோதனை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டைபறிச்சான், சம்பூர், மூதூர், கண்ணதீவு,சேரதுவர, காமபாறை, தோப்பூர், அன்புவழிபுரம் மற்றும செல்வ

உள்வாரியாக

துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான சகல

## ஜப்பான் புதிய அரசில் கட்சிகளுக்கிடையே விரிசல்

ஜப்பான் புதிய கூட்டர சாங்கத்தை ஏற்படுத்தி இருக்கும் கட்சிகளுக்கு இடையே பூசல்கள் தோன்றியிருப்பதாகவும் இதனால் இந்த அரசு நிலைக்குமா என்ற ஐயம் தோன்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் 38 ஆண்டுகளாக ஆட்சி செய்த லிபரல் ஜனநாயகக் கட்சியை தோற்கடித்து இக்கூட்டணி அரசாங்கம் ஏற்பட்டது தெரிந்ததே.

எழுதுவினைஞர் சேவையின்

## வினைத்திறன்காண் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பொது எழுதுனர் சேவையின் இரண்டாம் தரம் ''அ'' பிரிவில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதற்கான தகவல் ஒன்று யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளருக்குவடகிழக்குமாகாண சபையில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

இப்பரீட்சைக்கு சுமார் மூவாயிரம் விண்ணப்பங்கள் வடகிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பரீட்சை சம்பந்தமான மேலதிக விபரங்கள் எதுவும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. (பா)

அலகு கிராம அலுவலர் பயிற்சி நெறி நிறைவு நாள் விழாவும், சான்றிதழ் வழங்குதல் வைபவமும் இன்று பகல் 10 மணிக்கு பல்கலைக்கழகபுவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

மதிய

தொகை 1992க்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளை இலவச சீருடைக்காக 600,000,000 ரூபா ஒதுக்கப் பட்டது. இந்தச் செலவை மட்டுப்படுத்துவது பற்றி ஆராயவே இந்தக்குழு நியமிக்கப் பட்டுள்ளது.

நதன.

இந்தக் குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட யு. என். எச். சி. ஆர் இந்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

இதேவேளை அம்முகாம்களில் உள்ள நிலைமைகள் அத்தனை மோசமாக இருப்பதனாலேயே அங்கிருந்து மீண்டும் இலங்கைக்கே திரும்பிப் போவதைத் தவிர அகதிகளுக்கு வேறுவழியே] கிடைக்

பாதுகாப்பு

எடுத்துள்ளார்கள் இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு விசாரணை மேற்கொண்டுள்ளது.

இப் பிரச்சினை பாதுகாப்பு அதிகாரிகள் உயர்மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் ஆராயப்பட்டதாகவும் பொலிஸ் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளைத் தலையிட வேண்டாம் என்று எச்சரிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

உலக வங்கியின்

வசதிகள் போன்ற சமூகநலத் திட்டங்களுக்கு அரசு வேட்டு வைத்துள்ளது. இவற்றுக்கு வேட்டுவைக்கும் உலக வங்கியின் நிபந்தனையை ஏற்றுக் கொண்டே அரசாங்கம் உலக வங்கியிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக்கொண்டது.

இவற்றைவிட ரயில்வேத் திணைக்களத்தை ரயில்வே அதிகாரசபையாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் மாணவர்களதும், தொழிலாளர்களதும் பருவகாலப் பயணச் சீட்டுகள் ரத்துச் செய்யப்படும் அபாயநிலை உருவாகிறது. எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசும் போது அரசாங்கத்தின்மீது மேற்கண்டவாறு குற்றம் சாட்டினர்.

ஐ. நா, மத்தியஸ்தம்

குரியதாகும்.'' எனவும் கூறினார்.

''நாங்கள் தனிமையில் செய்வதற்கு உறுதியான அரசியல் நிலைப்பாடு இருக்கவேண்டும். பேச்சுவார்த்தைக்கு வருமாறு நாங்கள் புலிகளை நிர்ப்பந்திக்கவேண்டும்'' எனவும் தெரிவித்தார்.

150 பேருக்கு

ராலயத்தில் இருந்து 25 பேருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் 16, 17ஆம் திகதிக்குள் திரும்பிவிடவேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

எச். சி. ஆர் இற்கு உண்டு எனவும் முகாம்களை பார்வை

திருமலை

கடந்த இரண்டு வாரங்களில் திருக்கோணமலை நகரத்தை அடுத்துள்ள பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக புலனாய்வு அறிக்கைகள் தெரியப்படுத்துவதாக கூறப்படுகிறது, செவ்வாய்க்கிழமை இரவு குறைந்தது 50 பேரைக்கொண்ட புலிகள் குழுவொன்று குச்சவெளி மீன்பிடிக் கிராமத்தில்பொது மக்கள் போக்குவரத்தைச் சோதனை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டைபறிச்சான், சம்பூர், மூதூர், கண்ணதீவு, சேரதுவர, காமபாறை, தோப்பூர், அன்புவழிபுரம் மற்றும செல்வநாயகபுரம் ஆகிய இடங்களில் புலிகளின்நடமாட்டம் மிகவும் அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தரப்பில் கூறப்படுகிறது.

துள்ளனர்.

அகதிகள் இந்தியாவில் தங்குவதால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் என்ற முடிவில் அரசு தீவிரமாகவுள்ளதால் முகாம்களில் வசதிகளை ஏற்படுத்துவதால் அகதிகள் தங்கிவிடுவார்கள் எனவும் பாடசாலைகளில் முகாம் சிறுவர்களுக்கும் அனுமதி வழங்குவதை கூட அரசு தடைசெய்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இதேவேளை அங்கு கடமையாற்றிய பொதுஸ்தாபனங்களையும் அவர்களது கடமைகளை நிறுத்துமாறும் அரசு அறிவித்துள்ளது

உள்வாரியாக

துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் முற்றாக கைவிடும்வரை மாணவர்களின் போராட்டம் தொடரும் என விவசாய பீடமாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

# 'Wild Geese'

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)


## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நினைவஞ்சலியும்

இம்மை: 19-06-1900 மறுமை: 01-08-1993

அமரர்

## திருமதி இராசமுத்துதிக்கம் செல்லையாபிள்ளை

எமது இல்லத்தின் தீபமாய் விளங்கிய அன்னையே, தங்கள் ஆத்மா சாந்தியடையக் கந்தவனக் கடவை முருகப்பெருமானின் அருளை வேண்டிநிற்கின்றோம்.

எமது அன்னையின் மறைவுகேட்டு எமக்கு ஆதரவு காட்டித் தேறுதல் கூறி ஆவனசெய்த அத்தனைபேருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். நாளை 16-8-93 திங்கட்கிழமை திக்கத்தில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய வைபவத்தில் பங்குபற்றி எமது அன்னையின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்தித்து அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் பங்குபற்றும்வண்ணம் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்.

கந்தவனம்,
பொலிகண்டி.

தகவல்:
இராயர்திக்கம் செல்லையாபிள்ளை

(5694)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## மீளாத்துயரில்



### சின்னத்தம்பி மகேந்திரன்

வாழவேண்டும் என்று! . . .
நினைக்க மறந்தாயோ . . .
நாம் துயரத்தால் அழுகிறோம்
எம் கண்களில் இருந்து மலையின்
அருவியைப் போல் கண்ணீர்
வழிந்து கொண்டுள்ளது . . .
பாசத்தின் வடிவமாக இருக்கும்
உன் குடும்பத்தையும்
எங்கள் மனங்களில் இருத்திவிட்டு . . .
துன்பங்களிலேயே வாழ்ந்து
கொண்டிருக்கும்
எமக்கு மீண்டும் துன்பத்தின் . . .
பேரிடியாய் உன் மரணம் . . .

யாழ்/பல்கலைக்கழக சந்தி,
வர்த்தகர்கள்,
திருநெல்வேலி.
(கம்பஸ் சந்தி)

(5694)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 14-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10599

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-2355, 26-5725, 41-9480, 24-5734, 26-7068
26-4826, 41-3460, 42-3267, 26-2366 26-3183
24-9773, 26-3977, 26-1583, 24-7078 26-2786
24-6475, 26-4885, 24-8353, 26-8917

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-8515, 27-3910, 42-3339, 24-5188 26-1724
27-5099, 41-5983

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பு நாகம்மா

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பு நாகம்மா அவர்கள் 14-08-1993அன்று காலமானார்.

இவர் கந்தையா தம்புவின் அன்பு மனைவியும், காலம் சென்ற திரு. மு. கோபாலபிள்ளையின் அன்புத் தங்கையும், திரு. மு. கார்த்திகேசுவின் சகோதரியும், திரு. த. கந்தையாவின் (அதிபர் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி) அன்புத் தாயாரும், திருமதி க. மனோன்மணியின் அன்பு மாமியும், க. சிவநேசன், க. சிவாஜினி, க. கிருஷ்ணராகுலன், க. சயந்தன், க. வினோதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று(15-08-1993) பி. ப. 2 மணிக்கு வேவில் மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

கண்டிவீதி,
கொடிகாமம்.

(சி-7201)

த. கந்தையா
[மகன்]